வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959    Reg. No. : P . 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 05    20.12.2023 புதன்கிழமை    இதழ் : 352    பக்கங்கள் : 12







# இலங்கை கடலில் எந்த நாட்டின் கப்பலும் ஆய்வில் ஈடுபடமுடியாது

## ஒரு வருட தடை அறிவித்தது அரசாங்கம்

கொழும்பு, டிசெ. 20
இலங்கை கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்ள எந்தவொரு நாட்டின் கப்பலுக்கும் அனுமதி வழங்காதிருக்க இலங்கை தீர்மானித்துள்ளது. இந்த தடை ஒரு வருட காலத்துக்கு செல்லுபடியாகும் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை கடற்பரப்புக்குள் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் கப்பல்கள் பிரவேசிக்க முடியாது. சேவைகள் மற்றும் வசதிகளைப் பெற்றுக் கொள்ள இலங்கை துறைமுகங்களுக்கு வருகை தர முடியும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மற்றுமொரு விசேட ஆய்வுக் கப்பலை ஈடுபடுத்தி இலங்கை கடற்பரப்பின் விசேட பொருளாதார வலயத்தை ஆராய்வதற்கு சீனா, இலங்கையிடம் அனுமதி 11



# 4,806 பேர் முல்லைத்தீவில் மழையால் பாதிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 20
சீரற்ற காலநிலையினால் முல்லைத்தீவில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக 1586 குடும்பங்களை சேர்ந்த 4806 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு பிரதேச செயலக அதிகாரிகள், இராணுவத்தினர், பொதுமக்கள் உள்ளிட்டோர் உணவு உள்ளிட்ட அத்தியாவசிய உணவுகளை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இரணைமடு, முத்தையன்கட்டு மற்றும் தண்ணிமுறிப்பு குளத்தின் வான் 11

# போதை சார்ந்த குற்றங்கள்: 3 நாட்களில் மட்டும் யாழில் 70 பேர் கைது!

என். குகராஜ்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 20
**போதைப்பொருள் சார்ந்த குற்றச்சாட்டுகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற ரீதியில் கடந்த மூன்று நாட்களில் மட்டும் 70 பேர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையிலேயே இந்தக் கைதுகள் இடம்பெற்றன.**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை - விற்பனை - கடத்தல் அதிகமாக காணப்படுவதாக அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களில் பொலிஸார் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

கடந்த மூன்று தினங்கள் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையில் போதைப்பொருள் பாவனையாளர்கள், போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தவர்கள் என 70 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 11

# நான்கு நாள் சிசு திடீர் மரணம்!

யாழ்ப்பாணம், டிசெ.20
பிறந்து நான்கு நாட்களேயான சிசு திடீரென உயிரிழந்தது. சிசுவின் மரணத்துக்கு காரணம் கண்டறியப்படாத நிலையில் அதன் உடல்கூறு மாதிரிகள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆவரங்காலை சேர்ந்த தம்பதியரின் குழந்தையே இவ்வாறு திடீரென மரணமானது.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

குறித்த சிசு, 14ஆம் திகதி திருநெல்வேலியிலுள்ள தனியார் மருத்துவமனையில் பிறந்தது. இந்த நிலையில், கடந்த 16ஆம் திகதி தாயும் சேயும் வீடு திரும்பியிருந்தனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மதியம் குழந்தையின் உடல் குளிர்ந்து காணப்பட்டது. அத்துடன், அதன் கை, கால்களில் சிவப்பாக இருந்ததும் அவதானிக்கப்பட்டது.

இதையடுத்து, சிசுவை மீண்டும் பிரசவித்த தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். பின்னர், அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. அங்கு சிசு உயிரிழந்தது.

சிசுவின் மரணம் 11

# மின் கட்டணம் குறைவடையும்!

கொழும்பு, டிசெ. 20
கடந்த இரண்டரை மாதங்களாக நிலவும் அதிக மழைவீழ்ச்சியை கருத்தில் கொண்டு எதிர்வரும் ஜனவரி மாதத்தில் மின் கட்டணத்தை குறைக்க எதிர்பார்த்துள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனவரி மாதத்தில் மின் கட்டண திருத்தம் ஒன்றை மேற்கொள்ள நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

கடந்த ஒக்டோபர் மாத்தில் மின் உற்பத்திக்கான செலவுகள் அதிகளவில் காணப்பட்டமையால் 11

# புலம்பெயர்ந்தவர்கள் மீளவும் நாட்டுக்கு திரும்பும் சூழலை உருவாக்க வேண்டும்!

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, டிசெ. 20
"அபிவிருத்திக்கான பயணத்துக்கு புலம்பெயர்ந்தவர்களுடன் வினைத்திறனாக செயல்பட வேண்டியது அவசியம்.

புலம்பெயர்ந்தவர்களை மீள நாட்டுக்கு வரவழைப்பதற்கான சூழலை உருவாக்க வேண்டும்" என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி 11



# சீரற்ற காலநிலை; 10,958 பேர் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 20
தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் 12 மாவட்டங்களில் 3,200 குடும்பங்களைச் சேர்ந்த 10,958 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் மாத்திரம் ஆயிரத்து 708 குடும்பங்களைச் சேர்ந்த 5,625 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், கிழக்கு மாகாணத்தில் 863 குடும்பங்களைச் 11

# 'கூகுள் ட்ரைவ்'வில் ஆபாச காணொலி பதிவேற்றி வைத்திருந்த இளைஞர் கைது!

கொழும்பு, டிசெ. 20
சிறுமியை வன்புணர்ந்து, அந்தக் காணொலியை கூகுள் ட்ரைவில் ஏற்றி வைத்திருந்தவர் சிக்கினார்.

சிறுவர் ஆபாச படங்களை பார்க்கும் மற்றும் பகிரும் நபர்களை இலகுவாக அடையாளம் காண கூகுள் நிறுவனம் இலங்கை பொலிஸாருக்கு அறிமுகப்படுத்திய புதிய முறையின் பிரகாரம் இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் வசிக்கும் 18 வயது நபரே இவ்வாறு 11

# வட்டு. இளைஞர் கொலை விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.
வட்டுக்கோட்டை இளைஞர் நாகராசா அலெக்ஸ் படுகொலை வழக்கில் மரண விசாரணை தொடர்பான கட்டளை எதிர்வரும் ஜனவரி 2ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மரணித்த நபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய பொலிஸார், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட சிலர் மரண விசாரணையில் சாட்சியம் வழங்கினர். 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

சமூக வலைத்தளங்களைத் திறந்தால் அந்த வெற்றிச் செய்தி பற்றிய பதிவுகள்தான் ஆக்கிரமித்திருக்கின்றன.

தமிழகத்தில் முன்னணி தொலைக்கட்சி ஒன்றில் இடம்பெற்ற ‘சரிகமப’ பாடல் போட்டி நிகழ்ச்சியில் பாடி அசத்திய நமது கில்மிசாவின் வெற்றி பற்றிய செய்திகளே இன்று சமூகவலைத் தளங்களையும் ஊடகங்களையும் ஆக்கிரமிக்கின்றன. முழு சமூகமும் கொண்டாடவேண்டிய செய்திதான் அது.

ஆனால், சிலர் சந்தோசத்தின் உச்சத்திற்கு சென்றுவிட்டதாலோ என்னவோ, மாவீரர்களின் தியாகத்தால்தான் இந்த வெற்றி கிடைத்தது என்றும் எழுதுவதை சகித்துக்கொள்ள முடியவில்லை.

அந்த குழந்தையின் வெற்றியை- அதனை தமிழ் சமூகம் கொண்டாடிக் கொண்டிருப்பது பற்றிய செய்தியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு எடுத்துச் சென்று, தனது தொலைபேசி மூலமே அவளின் பெற்றோரோடு தொடர்புகொண்டு ஜனாதிபதியின் வாழ்த்தை பகிர செய்திருக்கிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

ஜனவரி முதல் வாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு மூன்று நாள் பயணமாக வரவிருக்கிறார். இந்த விஜயத்தின்போது அவர் கில்மிசாவின் இல்லத்துக்கு நேரில் வாழ்த்துத் தெரிவிக்க வருவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

அந்த வெற்றியையே இன்று ஒவ்வொரு தமிழர்களும் தமது வெற்றியாகக் கொண்டாடிக் கொண்டிருப்பது நல்லதுதான். ஆனால், அந்த வெற்றி நமக்கு ஒரு செய்தியையும் சொல்லியிருக்கின்றது. அதனை யாரும் கண்டுகொண்டிருப்பார்களோ தெரியவில்லை.

கில்மிசா தனது ஐந்தாவது வயதிலேயே யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும் டான் ரீ. வியின் மழலைகள் நேரம் என்ற மழலைகளுக்கான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, தனது பாடும் திறமையை வெளிப்படுத்தியவர். அதனையடுத்து ‘கலக்கல் ஸ்ரார்’ என்ற நிகழ்ச்சியில் பல தடவைகள் கலந்துகொண்டு தனது திறமையை வெளிப்படுத்தியவர். அப்போது யாழ்ப்பாணத்திலும் டான் ரீ.வியின் ரசிகர்களிடையேயும் மட்டுமே அறியப்பட்டிருந்த கில்மிசா இன்று எட்டுக்கோடி தமிழர்கள் மத்தியில் பிரபல்யமாகியிருக்கிறார்.

அவருடைய இந்த வெற்றியை காண்கின்றபோது அவரது பெற்றோர்களையே அதிகம் பாராட்டவேண்டும் போல இருக்கின்றது.

தமது பிள்ளைகள் கல்வி கற்கின்றபோது, தனது பிள்ளை டாக்டராக வரவேண்டும் அல்லது என்ஜினியராக வரவேண்டும் என்பதைத் தவிர நம்மவர்களுக்கு வேறு எதுவும் தெரிவதில்லை.

இந்த ஊர்க்குருவி மாணவனாக இருந்தபோது, ஒரு கிரிக்கெட் வீரனாக வரவேண்டும் என்று விரும்பியபோது அதனை பெற்றோர் ஊக்குவித்திருந்தால், ஒரு முத்தையா முரளிதரனாக இல்லாவிட்டாலும் யாழ்ப்பாணத்தில் நன்கு அறிமுகமான ஒரு கிரிக்கெட் வீரராக வந்திருப்பாரோ என்னவோ. கடைசியில் பெற்றோர் விரும்பியபடி டாக்டராகவும் முடியவில்லை, என்ஜினியராகவும் முடியவில்லை. ஊர்க்குருவி விரும்பியவாறு கிரிக்கெட் வீரராகவும் வரமுடியவில்லை.

அதிகம் ஏன், நமது முத்தையா முரளிதரன் கல்வி கற்றுக்கொண்டிருந்த போது, அவரது தந்தை முத்தையா அவரை ‘படி படி’ என்று நச்சரித்துக்கொண்டு விளையாட்டுக்கு அனுமதி கொடுத்திருக்காவிட்டால் இன்று முத்தையா முரளிதரன் ஒரு டாக்டராகவோ அல்லது என்ஜினியராக வாழ்ந்துகொண்டிருந்திருப்பார்.

அப்படியில்லாமல் அவரை அவரது விருப்பத்துக்கு விட்டதனால்தான் அவர் உலகப் புகழ்பெற்ற வீரராக இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.

இதேபோல தமது மகளின் பாடும் திறனை அவளது குழந்தைப் பருவத்திலேயே அறிந்துகொண்ட கில்மிசாவின் பெற்றோர், அவளை சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் பாட அனுமதித்து, அந்தத்துறையில் அவள் வளர அனுமதித்ததே அவளின் இன்றைய வெற்றிக்கு முதல் காரணம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த ஊர்க்குருவியை பொறுத்தவரை அவளின் வெற்றிக்கு காரணமான அவள் பெற்றோர் பாராட்டுக்கு உரியவர்கள்.

பிள்ளைகள் எந்தத் துறையில் நாட்டம் கொண்டிருந்தாலும் அவர்களை அந்த துறையில் பாண்டித்தியம் பெறவைப்பதுதான் ஒவ்வொரு பெற்றோர் முன்னாலும் உள்ள கடமை. இதனை நாம் புரிந்துகொண்டால் இதுபோன்ற பல சாதனைகளை நமது குழந்தைகள் நிகழ்த்திக்காட்டுவார்கள்.!

**- ஊர்க்குருவி.**







நல்லூர் சிவன் கோவில் என அழைக்கப்படும் கமலாம்பிகா சமேத கைலாசநாதசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும், 28ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

(படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பயிற்சி நிலையம் யாழிலும்!

கொழும்பு, டிசெ. 20

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு சொந்தமான பயிற்சி நிலையங்களை யாழ்ப்பாணம், அம்பாறை மாவட்டங்களிலும் ஹோமாகமவிலும் நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு, அவர்கள் செல்கின்ற நாடுகளுக்கு ஏற்றவாறான, துரிதமான விசேட பயிற்சி வேலைத் திட்டம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் நடத்தப்படுகின்றது.

நாடளாவிய ரீதியில் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டடங்களில் குறைந்தளவு வசதிகளுடன் இந்த பயிற்சிகள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், உரிய வசதிகளுடன் கூடிய பயிற்சி நிலையங்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு சொந்தமான காணிகளில் அமைப்பதற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் யோசனை சமர்ப்பித்திருந்தார்.

## மோட்டார் சைக்கிளை திருடி பாகங்களாக விற்றவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 20

கிளிநொச்சி நீதிமன்றம் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் கடந்த நவம்பர் 27ஆம் திகதி காணாமல் போயிருந்தது. இந்த மோட்டார் சைக்கள் தனித்தனிப் பாகங்களாக கழற்றி விற்பனை செய்யப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டது.

மோட்டார் சைக்கிளின் பாகத்தை விற்பனை செய்தவர் மீது சந்தேகமடைந்த பொலிஸார் அவரை பிடித்து விசாரித்தபோதே இந்த விடயம் வெளிப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபரை உதிரி பாகங்களுடன் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள்.

(ஐ)

## தானியங்கி ஆணுறை வழங்கும் இயந்திரம் மாயம்!

யாழ்ப்பாணம், டிசெ. 20

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் தானியங்கி ஆணுறை வழங்கும் இயந்திரம் காணாமல் போயுள்ளது.

எயிட்ஸ் தொற்றை கட்டுப்படுத்தும் வகையில், நாடாளாவிய ரீதியில் தானியங்கி ஆணுறை வழங்கும் இயந்திரங்கள் தெரிவு செய்யப்பட்ட சில பொது இடங்களில் பொருத்தப்பட்டது.

அவ்வாறு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வளாகத்தில் பொருத்தப்பட்டு இருந்த தானியங்கி ஆணுறை வழங்கும் இயந்திரம் காணாமல் போயுள்ளது. இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(ஐ)

## யாழ். வந்த விமானம் திரும்பி சென்றது!

யாழ்ப்பாணம், டிசெ. 20

யாழ்ப்பாணத்தில் நிலவும் மோசமான காலநிலையால் சென்னையில் இருந்து யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கு வந்த பயணிகள் விமானம் தரையிறங்க முடியாத சூழலால் சென்னைக்கு திரும்பி சென்றுள்ளது.

சென்னையில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை புறப்பட்ட விமானமே தரையிறங்க முடியாத சூழலால் மீண்டும் சென்னை விமான நிலையத்துக்கு சென்றுள்ளது.

(ஐ)

**யாழ்.கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் – கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது. 55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு : +447963743585 (Whatapp),
0212227141(Sri Lanka)
E.mail : Jamesraj_uk@yahoo.co.uk

Eelanadu ஈழநாடு
20.12.2023 புதன்கிழமை

சோபகிருது வருடம், மார்கழி 4

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# திருகோணமலை தொடர்பான சர்ச்சைகள்

‘ஆடு நனைகிறதென்று ஓநாய் கவலைப்படுவதாக’ ஒரு கூற்றுண்டு – அவ்வாறுதான் இப்போது சில விடயங்கள் முன்வைக்கப்படுகின்றன. மக்களுக்கு பாதகமான வகையில் திருகோணமலையை இந்தியாவுக்கு வழங்கினால் போராடப் போவதாக – மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் கூறியிருக்கின்றார். அண்மைக்காலமாக இவ்வாறான கதைகள் திட்டமிட்டு பரப்பப்படுகின்றனவா என்று சந்தேகப்பட வேண்டியிருக்கின்றது.

அனைத்து பல்கலைக்கழக ஒன்றியத்தின் தலைவர் வசந்த முதலிகே அவ்வப்போது திருகோணமலைக்கு சென்று திருகோணமலையை இந்தியாவுக்கு வழங்கப் போவதான – போலியான கதைகளைப் பரப்பி வருகின்றார். இதேபோன்று கொழும்பை தளமாகக் கொண்டு இயங்கிவரும் கடும்போக்கு குழுக்கள் சிலவும் இவ்வாறான கதைகளை கூறிவருகின்றன. இந்தியாவின் திட்டங்களுக்காக திருகோணமலை நகரை அண்டிய பகுதிகளிலிருந்து மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்படப் போவதான கதைகளைப் பரப்ப முற்படுகின்றனர்.

சில திட்டங்களை முன்னெடுப்பதற்காக அரசாங்கம் பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றது. அவைகள் அடிப்படையில் முதலீட்டுத் திட்டங்கள். அதனால் திருகோணமலை மக்களுக்கு ஏராளமான நன்மைகள் கிட்டும். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் திருகோணமலையில் இந்தியாவின் திட்டங்கள் வரவேற்கப்பட வேண்டும். அதேவேளை திருகோணமலையை தளமாகக் கொண்டு இயங்கிவரும் முன்னணி அரசியல் செயல்பாட்டாளர்கள் எவருமே இந்த விடயம் தொடர்பில் பேசவில்லை – ஆனால், இவ்வாறான போலியான பிரசாரங்கள் அனைத்தும் வெளியிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. இதன் பின்னணி தொடர்பில் தமிழ் கட்சிகள் ஆராய வேண்டும்.

பொதுவாக இந்திய அரசின் திட்டங்களை எதிர்க்கும் அரசியல் குழுக்கள் உண்டு. அவ்வாறான குழுக்களே திருகோணமலை தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்துகளைக் கூறி பொதுமக்கள் மத்தியில் தேவையற்ற அச்சங்களை விதைக்க முயற்சிக்கின்றன.

திருகோணமலை ஒரு மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடம். திருகோணமலை எவரிடம் இருக்கின்றதோ – அவர் ஒட்டுமொத்த இந்து சமுத்திர பிராந்தியத்தையே கட்டுப்படுத்தும் வல்லமையை பெறுவார் – என்பது நெப்போலியனின் கூற்று. இன்றைய உலக இராணுவ தொழில்நுட்ப வளர்ச்சியின் பின்னணியில் நோக்கினால் இந்தக் கூற்று முன்னைய கவர்ச்சியுடன் நோக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை – எனினும், திருகோணமலையின் மூலோபாய முக்கியத்துவம் இப்போதும் தவிர்க்க முடியாத இடத்திலேயே இருக்கின்றது. இந்த அடிப்படையில், திருகோணமலையில் இந்தியாவுக்கு எதிரான சக்திகள் நிலைகொண்டால் அது இந்தியாவின் தேசிய பாதுகாப்பை நிச்சயம் கேள்விக்கு உள்ளாக்கும். இந்தப் பின்புலத்தில் திருகோணமலை தொடர்பில் இந்தியா பிரத்தியேக கவனம் செலுத்துவது முற்றிலும் சரியானதும் நியாயமானதுமாகும். ஆனால், அதற்காக திருகோணமலையை இந்தியாவுக்கு வழங்கப் போவதான கதைகள் முற்றிலும் தவறானவை. இவ்வாறான கருத்துகள் பரப்பப்படுவதற்கு பின்னால் நிச்சயமாக இந்தியாவுக்கு எதிரான சக்திகள் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சில வெளிவிவகார தீர்மானங்களின் விளைவாக இந்தியா அதிருப்தியடைந்தது. இதன் விளைவாகவே இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் திருகோணமலை துறைமுகத்தின் பயன்பாடு மற்றும் எண்ணெய் குதங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. ரணில் விக்கிரமசிங்க திருகோணமலையை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவின் முதலீடுகளை பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். இந்த அடிப்படையில் சில திட்டங்களை முன்னெடுப்பதற்கான உடன்பாடுகள் எட்டப்பட்டிருக்கின்றன. இவ்வாறான பின்புலத்தில்தான், இந்தியா தொடர்பான போலியான செய்திகளை பரப்ப முற்படுகின்றனர்.

# முட்டைகளை தொடர்ந்தும் இறக்குமதி செய்ய தீர்மானம்!

*கொழும்பு, டிசெ. 20*

*உள்நாட்டு சந்தையில் முட்டை விலையை உறுதிப்படுத்துவதற்காக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தால் விதந்துரை செய்யப்பட்ட பண்ணைகளிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.*

*உள்நாட்டு சந்தையில் முட்டை விலையை உறுதிப்படுத்துவதற்காக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கத்தினால் அடையாளம் காணப்பட்டுள்ள இந்திய பண்ணைகளிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்காக கடந்த ஓகஸ்ட் 14ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.*

*அதற்கமைய, சமகாலத்தில் வரையறுக்கப்பட்ட அரச வர்த்தக (பல்நோக்கு) கூட்டுத்தாபனத்தின் மூலம் 15.5 கோடி முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதுடன், 2023.12.31 திகதிக்கு முன்னர் மேலும் 1.8 கோடி முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*சமகாலத்தில் திறந்த சந்தையில் முட்டையின் சில்லறை விலை அதிகரிக்கும் போக்கு நிலவுகிறமையால், உள்ளூர் திறந்த சந்தையில் முட்டை விலையை நிலைப்படுத்துவதற்காக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தால் ஏற்கனவே விதந்துரை செய்யப்பட்ட இந்திய பண்ணைகளிலிருந்து தொடர்ந்தும் முட்டைகளை இறக்குமதி செய்வதற்காக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)*

# மன்னார் மாந்தை மேற்கில் மழையால் இடைத்தங்கல் முகாம்களில் மக்கள்!

*மன்னார், டிசெ. 20*

*நாட்டில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக மன்னார் மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் வெள்ள பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளப் பாதிப்பினால் பாதிக்கப்பட்டு 3 இடைத்தங்கல் முகாம்களில் மக்கள் வசித்து வருகின்றனர்.*

*மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 175 குடும்பங்களைச் சேர்ந்த 427 நபர்கள் பாதிக்கப்பட்டு மூன்று இடைத்தங்கல் முகாம்களில் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு தேவையான அத்தியாவசிய உதவிகளை பிரதேச செயலகம் மற்றும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு முன்னெடுத்து வருகின்றது.*

*இந்நிலையில், குறித்த இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்களுக்கு அத்தியாவசிய உதவிகளை வழங்க மெசிடோ நிறுவனம் முன்வந்துள்ள நிலையில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை குறித்த இடைத்தங்கல் முகாம்களுக்கு மெசிடோ நிறுவன பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் சென்று பார்வையிட்டதோடு முதல் கட்டமாக குழந்தைகளுக்கான பிஸ்கட் மற்றும் பால்மா போன்றவற்றை வழங்கி வைத்துள்ளதோடு,முகாம்களில் உள்ள மக்களுக்கு ஏற்பட்டுள்ள தேவைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டனர்.(அ)*

# யாழ். மாவட்டத்தில் 745 பேர் பாதிப்பு

*யாழ்ப்பாணம்,டிசெ. 20*

*யாழ்ப்பாண மாவட்டத்தில் பெய்துவரும் மழை காரணமாக 219 குடும்பங்களைச் சேர்ந்த 745 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 22 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.*


*நேற்று செவ்வாய்க் கிழமை காலை 10 மணி வரையான நிலவரப்படி யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜ் குறித்த விடயத்தை தெரிவித்தார்.*



*பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் 146 குடும்பங்களைச் சேர்ந்த 485 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 60 குடும்பங்களைச் சேர்ந்த 205 பேரும், கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேரும்,சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேரும் உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

*சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேர் அன்னை முன்பள்ளி நிலையத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.(அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



டிசெம்பர்- 20 புதன்கிழமை
சோபகிருது வருடம் - மார்கழி 04
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : அட்டமி




**மேடம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உங்கள் கை ஓங்கும். சாதிக்கும் நாள்.

**இடபம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். சாதிக்கும் நாள்.

**மிதுனம்**
இதுவரை இருந்த சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் சூட்சுமங்களை உணருவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் உதவி கிடைக்கும். மாற்றம் ஏற்படும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் அடுக்கடுக்கான வேலைகளால் அவதிக்கு உள்ளாவீர்கள். உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டி இருக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
கடினமான வேலைகளையும் மாறுபட்ட அணுகுமுறையால் முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கன்னி**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**துலாம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**விருட்சிகம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். உழைப்பால் உயரும்நாள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மனதில் இனம்புரியாத பயம் வந்துப் போகும். உத்தியோகத்தில் அதிகாரிகளை பகைத்து கொள்ள வேண்டாம். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

**மீனம்**
எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

# முருகனை லண்டனுக்கு அனுப்பி வைக்க முடியாது

## மத்திய அரசு நீதிமன்றில் வாதம்

சென்னை, டிசெ. 20

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நளினி, முருகன், சாந்தன் உள்ளிட்ட அனைவரையும் விடுதலை செய்து உச்சநீதிமன்றம் கடந்தாண்டு உத்தரவிட்டது.

இவர்களில் முருகன், சாந்தன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் இலங்கையை சேர்ந்தவர்கள் என்பதால் திருச்சியில் உள்ள சிறப்பு அகதிகள் முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் லண்டனில் வசிக்கும் தங்கள் மகளுடன், தானும், தனது மனைவியும் ஒன்றாக சேர்ந்து வாழ விரும்புவதால் லண்டன் செல்ல ஏதுவாக கடவுச்சீட்டு பெறுவதற்காக திருச்சியில் இருந்து சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரகத்துக்கு வந்து செல்ல அனுமதி கோரி முருகன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது மத்திய அரசு தரப்பில் வாதாடியவர்,

“கொலை வழக்கில் குற்றவாளியான இலங்கையை சேர்ந்த முருகனை லண்டனுக்கு அனுப்பி வைக்க முடியாது. இலங்கை துணை தூதரகம் உரிய ஆவணங்களை வழங்கினால் மட்டுமே அவரை இலங்கைக்கு திருப்பி அனுப்ப முடியும் என்றார். தமிழக அரசு தரப்பில், கடவுச்சீட்டு பெற திருச்சி சிறப்பு முகாமில் இருந்து சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரகத்துக்கு முருகனை அழைத்து வர உரிய பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும்”, என்று கூறினார்.

இதைப்பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், முருகனுக்கு கடவுச்சீட்டு வழங்குவதற்காக இலங்கை துணை தூதரகம் நேர்காணலுக்கு அழைக்கும்போது அவருக்கு உரியபாதுகாப்பு வழங்க உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தனர்.

(ஐ)

# வெள்ளத்தால் பாதிக்கப்படும் மக்களை மீட்க ஹெலி தேவை

## பாதுகாப்பு அமைச்சருக்கு முதல்வர் கடிதம்





சென்னை, டிசெ. 20

தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்கும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கூடுதல் ஹெலிகொப்டர்கள் அனுப்பக் கோரி பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்குக்கு தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக, பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங்குக்கு முதல்வர் மு. க. ஸ்டாலின் நேற்று எழுதியுள்ள அக்கடிதத்தில்,

தமிழகத்தின் தென்மாவட்டங்களில் கடந்த இரண்டு நாட்களாக வரலாறு காணாத அளவில் மழை பெய்துவருகிறது. ஒருசில இடங்களில் 1871-ஆம் ஆண்டுக்குப் பிறகு அதிக மழை பெய்துள்ளது. அதன் காரணமாக திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் வசிக்கும் சுமார் 40 இலட்சம் பேர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். தாமிரபரணி ஆற்றிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சிறீவைகுண்டம், தூத்துக்குடி நகரங்களில் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது.

மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகின்றன. பிற மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட நிவராணப் பொருட்கள் இணைப்புச் சாலைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள காரணத்தால் மக்களுக்கு விநியோகிக்க முடியவில்லை. எனவே, அவற்றை ஹெலிகொப்டர்கள் மூலம் மட்டுமே விநியோகிக்க இயலும்.

வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்பதற்கும் உணவுப் பொருட்களை விநியோகிக்கவும் விமானப்படையின் 4 ஹெலிகொப்டர்கள், கடற்படையின் 2 ஹெலிகொப்டர்கள், கடலோர காவல் படையின் 2 ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பெருமழையின் தாக்கம் அதிகமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு கூடுதல் ஹெகொப்டர்கள் தேவைப்படுவதால், அதிகபட்ச அளவில் ஹெலிகொப்டர்களை அனுப்பி வைக்க வேண்டும் - என்றுள்ளது.

(ஐ)

# “பாராளுமன்றத் தேர்தலை கூட்டணியாக சந்திப்போம்”

சென்னை, டிசெ. 20

பாராளுமன்ற தேர்தலை கூட்டணியுடன் எதிர்கொள்வோம் என முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அணி சார்ந்த தலைமை நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ‘அண்ணா திராவிட முன்னேற்ற கழக தொண்டர்களின் உரிமை மீட்புக் குழு’, என்ற பெயரில் நடைபெற்ற இந்த கூட்டத்துக்கு ஓ.பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார்.

அங்கு பேசிய அவர், தனிக் கட்சி தொடங்கும் எண்ணம் எனக்கு எப்போதும் இல்லை. தனிக்கட்சி தொடங்கினால் சட்ட சிக்கல் ஏற்படும் என்பதால் தான், ‘அ. தி. மு. க. தொண்டர்கள் உரிமை மீட்பு குழு’, என்ற பெயரில் அமைப்பாக தற்காலிகமாக செயல்படுகிறோம். ஜன. 6இல் கோவையில் நடைபெற இருந்த மாநாடு தவிர்க்க முடியாத காரணங்களால் தள்ளிவைக்கப்படுகிறது.

முதல் தர்மயுத்தம் ஜெயலலிதாவின் எண்ணத்தை நிறைவேற்ற தொடங்கினோம். தற்போது, நாம் 2ஆவது தர்மயுத்தத்தை நடத்தி கொண்டிருக்கிறோம். கட்சி உடைந்துவிடும் என்பதால்தான், கட்சியில் இருந்து விலகாமல் பொறுமையாக இருந்தேன்- என்றார். (ஐ)

# சீன ஆய்வுக் கப்பலுக்கு அனுமதி மறுத்தது அரசு?

கொழும்பு, டிசெ. 20

**நாட்டின் கடல் எல்லைக்குள் ஆய்வுகளை மேற்கொள்ள முற்பட்ட சீன ஆய்வுக் கப்பலுக்கு அரசாங்கம் அனுமதி வழங்க மறுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

**சீனாவின் அதிநவீன ஆராய்ச்சிக் கப்பலான ஷியாங் யாங் ஹொங்-3 இலங்கை மற்றும் மாலைதீவு உள்ளிட்ட இந்தியப் பெருங்கடல் பகுதியில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை ஆய்வுகளை மேற்கொள்ளும் என அறிவிக்கப்பட்டிருந்தது.**



இந்த ஆய்வுக் கப்பலுக்கான அனுமதியை இலங்கை மற்றும் மாலைதீவுகளிடம் இருந்து சீனா உத்தியோகபூர்வமாக கோரியிருந்தது.

இருப்பினும், சீன கப்பலின் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளுக்கு இந்தியா தமது கடுமையான ஆட்சேபனையை தெரிவித்திருந்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

விஞ்ஞான ஆய்வு என்ற போர்வையில் உளவுத்துறை தரவுகளை சேகரிக்கும் நோக்கில் இந்த ஆராய்ச்சி பணியை சீனா முன்னெடுப்பதாக இந்திய ஊடகங்கள் குற்றஞ்சாட்டியிருந்தன.

மாலைதீவில் புதிதாக தெரிவாகியுள்ள ஜனாதிபதி, சீனாவின் சார்புடையவர் என்ற அடிப்படையில், அவர் இந்த கப்பலுக்கு அனுமதியை வழங்குவார் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே அவர் மாலைதீவில் நிலைக்கொண்டுள்ள இந்திய படையினரை மீளப்பெறுமாறு கோரியிருந்த நிலையில், இந்த சீனக்கப்பலுக்கான அனுமதியை வழங்கினால், அது இந்தியாவுக்கும் மாலைதீவுக்கும் இடையிலான முரண்பாட்டை தோற்றுவிக்கலாம் என சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# அரசு மாறும்போதும் மாறாத டிஜிற்றல் பொருளாதார கொள்கை அறிமுகம்!

## இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்

கொழும்பு, டிசெ. 20

அரசாங்கங்கள் மாறும்போது மாற்றம் அடையாத டிஜிற்றல் பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்துவதற்கு அவசியமான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் டிஜிற்றல் மயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவுக்காக இரண்டு பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த நிதியை டிஜிற்றல் மயமாக்கலுக்கு பயன்படுத்துவதன் மூலம் 2025 ஆம் ஆண்டளவில் இலங்கை மக்கள் அதன் பயனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்படும் வரை, டிஜிற்றல் மயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவு பற்றிய வார்த்தைகள் இந்த நாட்டில் மிகவும் குறைவாகவே பயன்படுத்தப்பட்டன.

ஜனாதிபதியின் தொலைநோக்குப் பார்வையினால் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக டிஜிற்றல் மயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவை இலகுவாகப் பயன்படுத்த முடியும்.

இதன்படி, நாட்டின் பொருளாதாரத்தில் டிஜிற்றல் பொருளாதாரம் வழங்கி வந்த பங்களிப்பை 03 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச சேவையை டிஜிற்றல் மயமாக்குவதன் மூலம், செயற்திறன் மிக்க அரச சேவையைப் பேணுவதற்கான சூழல் உருவாக்கப்படுகிறது.

அதன் ஊடாக போட்டித் தன்மை கொண்ட சேவைகளை வழங்குவதற்கு அரச சேவையை வலுப்படுத்தும் ஆற்றல் டிஜிற்றல் மயமாக்கலுக்கு உண்டு.

இந்த முழுமையான செயல் முறைகளின் மூலம் வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது தற்போதைய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்-என்றார். (அ)



# மாவாவுடன் இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 20

கொக்குவில் பகுதியில் மாவா பாக்குடன் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த இளைஞர்களிடம் இருந்து 50 கிராம் அடங்கிய மாவா பாக்கு பொட்டலங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# உலகத் தமிழர் பேரவைக்கு ஹரி ஆனந்தசங்கரி கண்டனம்

கொழும்பு, டிசெ. 20

உலகத் தமிழர் பேரவையும், கனேடிய தமிழ் காங்கிரஸும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் சந்தித்து கலந்துரையாடியமைக்கு கனேடிய அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி கண்டனம் வெளியிட்டுள்ளார்.

பாரிய மனித உரிமை மீறல்களுக்காக மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் மீது 2023 ஆம் ஆண்டு ஜனவரி கனேடிய அரசு தடைகளை விதித்தமையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள், இனப்படுகொலை என்பவற்றுக்கு பொறுப்புக் கூறலை வலியுறுத்தி பல வருட போராட்டத்திற்கு பின்னரே இந்த தடை விதிக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில் பாதிக்கப்பட்டவர்கள், சமூக அமைப்புகள், இலங்கை தமிழர்களுடன் கலந்தாலோசிக்காது மேற்கொள்ளப்படும் இந்த முயற்சி பாரிய தவறு என்றும் கரி ஆனந்தசங்கரி கண்டனம் வெளியிட்டுள்ளார்.

மேலும் தாய்நாட்டில் உள்ள தமிழ் மக்களின் நலன்களுக்காக செயற்படுவதாக இந்த அமைப்புகள் கூறுவதன் மீதும் இருந்த நம்பிக்கையை இது இழக்கச் செய்துள்ளதாக ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்தார். (அ)

# இந்த வருடம் 2000 சிறுமிகள் கர்ப்பம்!

கொழும்பு, டிசெ. 20

இவ்வருடம் 2000 சிறுமிகள் தாயாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொலிஸாரின் அறிக்கையின்படி கடந்த நவம்பரில் பத்து சிறுமிகள் கர்ப்பம் தரித்துள்ளதாகத் தெரியவருவதாக அமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

சிறுமிகள் தாயாக மாறுவது சமூக மற்றும் சட்டப் பிரச்னையாக மாறியுள்ளதாக தேசிய குழந்தைகள் நல ஆணையம் தெரிவித்துள்ளது. (அ)

சட்டவிரோதமாக இறக்குமதி;

# 3 கோடி ரூபாய் பெறுமதியான பொருட்களுடன் நால்வர் கைது

கொழும்பு, டிசெ. 20

சட்டவிரோதமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சுமார் மூன்று கோடி ரூபா பெறுமதியான பொருட்களுடன் நால்வரை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் அதிகாரிகள் குழு கைது செய்துள்ளது.

அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளை செலுத்தாமல், அனைத்து சோதனை நடவடிக்கைகளையும் தாண்டி விமான நிலையத்திற்கு வெளியே கொண்டுசெல்லப்பட்ட பொருட்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டன.

இவர்கள் நாளாந்தம் டுபாய் உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்று சட்டவிரோதமான முறையில் பொருட்களை இலங்கைக்கு கொண்டு வருவது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (அ)

# சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் அலுவலகத்திற்கு ‘சீல்’ வைக்குமாறு உத்தரவு

கொழும்பு, டிசெ. 20

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர், வைத்தியர் சமன் ரத்நாயக்கவின் அலுவலகத்திற்கு சீல் வைக்குமாறு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

சர்ச்சைக்குரிய ஹியுமன் இமியூனோகுளோபியூலின் மருந்து கொடுக்கல் - வாங்கல் தொடர்பில் சந்தேகநபர்கள் நேற்று முன் தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வைத்தியர் சமன் ரத்நாயக்கவின் அலுவலகத்தை நேற்று முற்பகல் சோதனைக்குட்படுத்துமாறும் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவிற்கமைய சமன் ரத்நாயக்கவின் அலுவலகத்திலுள்ள ஆவணங்கள் நேற்று பரிசோதிக்கப்பட்டன.

இந்த கொடுக்கல் - வாங்கல் தொடர்பில், குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திர குப்த எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

# வெளிநாட்டுத் தமிழர்களுடன் பேசும் ரணில் உள்நாட்டில் தமிழருக்கு தவறான சமிக்ஞை

## சாடுகின்றார் மனோ கணேசன்



**கொழும்பு, டிசெ. 20**

**வெளிநாட்டு தமிழருடன் பேசும் ரணில் உள்நாட்டில் தமிழருக்கு தவறான சமிக்ஞைகளை தருகிறார் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

**இது தொடர்பில் மனோ கணேசன் அறிக்கையொன்றில்-**

உலகத்தமிழர் பேரவை அங்கத்தவர்களை, தடை நீக்கம் செய்து, அழைத்து ஜனாதிபதி ரணில் பேசுவது நல்லதே. அதை நான் வரவேற்கிறேன். ஆனால், அவர் உள்நாட்டில் தமிழருக்கு தொடர்ந்து தவறான சமிக்ஞைகளை தருகிறார். இதில் ஒன்று, மக்களுடன் எந்தவித நேரடி தொடர்புகளும் இல்லாத அமைச்சர் டிரான் அலசின் பேச்சை கேட்டு, எனது தொகுதி கொழும்பில் மீண்டும் பொலிஸ் பதிவுகளை ஆரம்பித்துள்ளமை ஆகும்.

இரண்டாவது, வடக்கு கிழக்கிலாவாது மாகாணசபை தேர்தல்களை நடத்தி அங்கே மாகாணசபைகளை ஏற்படுத்த ரணில் தயாரில்லை என்பதாகும். மூன்றாவது, பாதிட்டில் ரணில் உறுதியளித்த, மலைநாட்டில் 10 பேர்ச் காணி வழங்கல் பொறுப்பையும், அதற்கு ஒதுக்கப்பட்டதாக கூறப்படும் 400 கோடி ரூபாவையும் இப்போது யார் வைத்திருக்கிறார்கள் என்பது தெரியாமையாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கடந்த வாரம் அவரது பாராளுமன்ற அலுவலகத்தில் நேரடியாக சந்தித்து மூன்று விடயங்கள் குறித்து கேள்விகளை எழுப்பி கோரிக்கை விடுத்தேன்.

தற்போது ஜனத்தொகை புள்ளிவிவர கணக்கெடுப்பு சிவில் அதிகாரிகள் செய்யும் வேலைகளுக்கு மேலதிகமாக, உங்கள் அமைச்சர் டிரான் அலசின் பொலிஸ்காரர்களை தமிழர்களின் வீடுகளுக்கு சிங்களம் மட்டும் படிவங்களுடன் அனுப்பி, சிவில் அதிகாரிகள் செய்யும் வேலைகளை செய்து, எனது தொகுதி கொழும்பில் வாழும் தமிழர் மத்தியில் தேவையற்ற பதட்டங்களை ஏன் ஏற்படுத்துக்கிறீர்கள்?

குறைந்தபட்சம் உடனடியாக வடக்கு கிழக்கு மாகாணங்களிலாவது மாகாணசபை தேர்தல்களை நடத்தி, அங்கே முதற்கட்டமாக மாகாணசபை நிர்வாகங்களை ஏற்படுத்தலாம். அதை ஏன் இழு, இழு என்று இழுத்துகொண்டே போகிறீர்கள்?

மலைநாட்டு பெருந்தோட்டங்களில், நீங்கள் பாதிட்டில் உறுதியளித்த 10 பேர்ச் காணி துண்டுகளை, பெருந்தோட்டங்களில் வாழும் குடும்பங்களுக்கு வழங்கலாம்.

இந்திய, இலங்கை வீடமைப்பு திட்டங்களின் வீடு கட்டும் பணிகள், அரச நிர்வாக கட்டமைப்புகளின் ஊடாக நடைமுறையாக தாமதம் ஆகும். ஆகவே காணி வழங்களுக்காக நீங்கள் ஒதுக்கிக்கொண்டுள்ள 400 கோடி ரூபாயை பயன்படுத்தி, காணிகளை பிரித்து வழங்கலாம். ஆனால், இந்த 10 பேர்ச் காணி வழங்கல் பொறுப்பையும், அதற்கு ஒதுக்கப்பட்டதாக கூறப்படும் 400 கோடி ரூபாவையும் இப்போது யார் வைத்திருக்கிறார்கள்?

இந்த கேள்விகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதில் கூற வேண்டும். அல்லது அவருடன் கூட்டு குடித்தனம் செய்கின்றவர்கள் பதில் கூற வேண்டும். இவை தொடர்பில் கடந்த வாரம் எதிர்க்கட்சி தலைவர் அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த வெளிநாட்டு பிரதிநிதிகளுடனான சந்திப்பில், இலங்கைக்கான அமெரிக்கா, இந்தியா, சுவிஸ், நெதர்லாந்து, கனடா, பிரான்ஸ், தென்னாபிரிக்கா, இத்தாலி நாடுகளின் தூதுவர்களும் ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரிட்டன், நியூசிலாந்து, ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகளின் துணை தூதர்களும், முதன்மை அதிகாரிகளும் கலந்துகொண்ட நிகழ்விலும் அவர்களுக்கு விளக்கமாக நான் எடுத்து கூறி இருந்தேன்-என்று தெரிவித்துள்ளார்.

(அ)

# சிறைச்சாலை பஸ்களில் சி.சி.ரி.வி. கமெராக்கள்!

கொழும்பு, டிசெ. 20

சிறப்பு பிரிவு கைதிகளை ஏற்றிச்செல்லும் சிறைச்சாலை பஸ்களில் சி.சி.ரி.வி. கமெராக்களைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும் நோக்கில் பஸ்களில் இவ்வாறு சி.சி.ரி.வி கமெராக்கள் பொருத்தப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினி பி திசாநாயக்க தெரிவித்தார்.

சிறைச்சாலைகளில் இருந்து கைதிகள் வெளியில் அழைத்துச் செல்லப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் இதனூடாக கண்காணிக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

பஸ்ஸுக்குள் கைதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகள் தொடர்பிலும் இதனூடாக கண்காணிக்க சந்தர்ப்பம் கிடைக்குமென சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

சில சந்தர்ப்பங்களில் வெளியில் இருந்து பஸ்ஸிற்குள் போதைப்பொருளை வீசும் சம்பவங்களும் பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சிறைச்சாலைகளில் தற்போது போதைப்பொருட்களுக்கு அடிமையான சுமார் 14,500 பேர் உள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

(அ)

# போதைப்பொருளில் சம்பாதித்த பணம் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் மீட்பு

கொழும்பு, டிசெ. 20

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் திட்டமிட்டக் குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்களை ஒடுக்கும் விசேட வேலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு சொந்தமான 67 மில்லியன் ரூபா பெறுமதியான வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லக்சிறி கீதால் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளுக்கு அமைய சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவின் 6 பிரிவினர் மேற்கொண்ட வெவ்வேறு தேடுதல் நடவடிக்கையின் போது போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு சொந்தமான 670 இலட்சம் ரூபா பெறுமதியான 8 வாகனங்கள் இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

குறித்த வாகனங்கள் அனைத்தும் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவின் கீழ் வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனிடையே பாதாளக்குழு மற்றும் போதைப்பொருள் வர்த்தகர்களின் வீடுகள், ஹோட்டல்கள், விடுதிகள் சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதுடன் 3 ஆயிரத்துக்கும் அதிகமான பாதாளக்குழு செயற்பாட்டாளர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன- என்றார்.

(அ)

# நாடு முழுக்க 24 மணி நேரத்தில் 2,166 சந்தேக நபர்கள் கைது!

கொழும்பு, டிசெ. 20

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது 2,166 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்க ளில் 66 பேருக்கு எதிராக தடுப் புக் காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளதுடன், 14 சந்தேகநபர்கள் தொடர்பில் சொத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன. மேலும் 226 பேர் புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 1 கிலோ 370 கிராம் ஹெரோயின், 556 கிராம் ஐஸ், 7 கிலோ 800 கிராம் கஞ்சா, 3 கிலோ 500 கிராம் மாவா மற்றும் 1,075 போதை மாத்திரைகளும் சோதனை நடவடிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டன.

(அ)

# 82 ஆயிரத்து 655 டெங்கு நோயாளர்கள்!

கொழும்பு, டிசெ. 20

நாட்டில் இந்த வருடத்தில் மாத்திரம் இதுவரை 82 ஆயிரத்து 655 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் இங்கு 17 ஆயிரத்து 423 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, அதிகூடிய டெங்கு நோயாளர்கள் கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன், அந்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 643 ஆகும்.

இது தவிர கண்டி, புத்தளம், குருநாகல், மட்டக்களப்பு, இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் அதிகூடிய டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதேநேரம், இந்த மாதத்தில் மாத்திரம் 6 ஆயிரத்து 165 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

டெங்குத் தொற்றில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைளை மேற்கொள்ளுமாறு அப்பிரிவு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

(அ)

# புலம்பெயர்ந்த மக்களுடன் இணைந்து பயணிக்க தயார்

## பிரதமர் தினேஷ் கூறுகிறார்



கொழும்பு, டிசெ. 20

சர்வதேச நாடுகளில் வாழ்கின்ற இலங்கை புலம்பெயர் மக்களுடன் இணைந்து செயற்படுவதற்கும் அவர்களது பங்களிப்பை இலங்கையின் வளர்ச்சிக்கு பெற்றுக்கொள்வதற்கும் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

கடந்த வாரம் முழுவதும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு உலகத் தமிழர் பேரவை மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

இந்தநிலையிலேயே பிரதமர் தினேஷ் குணவர்தன புலம்பெயர் மக்களுடன் இணைந்து செயற்படுவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலகத் தமிழர் பேரவை மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மகாநாயக்கத் தேரர்கள், ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சபாநாயகர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்ததுடன் இலங்கையை மீள் கட்டியெழுப்புவதை நோக்கமாக கொண்ட இமயமலை பிரகடனம் ஒன்றையும் வெளியிட்டிருந்தனர்.

இந்நிலையில் நான் இந்தத் தரப்பினரை சந்திக்கவில்லை. எனினும் ஒரு விடயத்தை குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்கம் புலம்பெயர் மக்களின் பங்களிப்பை பெறுவதற்கு தயாராக இருப்பதுடன் அவர்களுக்கான வசதிகளை செய்து கொடுக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

புலம் பெயர் மக்களின் பிரதிநிதிகளை இதற்கு முன்னரும் பல தடவைகள் சந்தித்திருக்கிறேன்.

அவர்கள் இலங்கையில் வந்து முதலீடு செய்யவும் அபிவிருத்தியில் பங்கெடுக்கவும் ஆர்வத்துடன் இருக்கின்றனர். அவர்களுக்கான சகல வசதிகளையும் செய்து கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்கின்றது.

அதற்காகவே வெளிநாட்டு வாழ் இலங்கையர்களுக்காக ஒரு அலுவலகமும் நியமிக்கப்பட்டிருக்கின்றது. புலம்பெயர் மக்கள் இலங்கை வந்து முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்தால் அதற்கான சகல வசதிகளையும் செய்து கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்கின்றது-என்றார்.

(அ)

# வடக்குக்கு பாலியாற்று குடிதண்ணீர் வழங்கல் ஜனவரி மாதம் முதல் வாரம் ஆரம்பிக்கப்படும்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20

**வடக்கிற்கான பாலியாற்று பாரிய குடிதண்ணீர் வழங்கல் திட்டம் ஜனவரி 4, 5, 6 ஆம் திகதிகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கிற்கான விஜயத்தின் போது ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.**

வடக்கு மக்களின் நீண்டகால குடிநீர்ப் பிரச்னைக்கு தீர்வு காணும் பொருட்டு பாலியாற்று நீர் வழங்கல் திட்டத்தை முன்னெடுக்கும் முக்கிய கலந்துரையாடல் கடற்றொழில் அமைச்சரும் யாழ்ஃ கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் என். சுதாகரன் பாலியாற்று குடிதண்ணீர்த் திட்டம் தொடர்பாக விரிவாக எடுத்துரைத்தார்.

இத்திட்டம் தொடர்பில் கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது கைகூடாத நிலையில் கடந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதேவேளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் பலனாக அமைச்சரவை இத்திட்டத்திற்கு 250 மில்லயின் ரூபாவை ஒதுக்குவதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன், நீர்ப்பாசன நீர்வழங்கல் முகாமையாளர்கள், வடக்கு மாகாண அவைத் தலைவர சி.வி.கே. சிவஞானம் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வேலைவாய்ப்புக்காக தாய்லாந்துக்கு சென்ற 56 இலங்கையர் பயங்கரவாத குழுவின் பிடியில்

கொழும்பு, டிசெ. 20

தாய்லாந்தில் வேலைக்காக சென்ற 56 இலங்கையர்கள் மியன்மாரை சேர்ந்த பயங்கரவாத குழுவொன்றிடம் சிக்குண்டுள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தகவல் தொழில்நுட்ப துறை வேலைகளிற்காக தாய்லாந்து சென்ற இலங்கையர்களே மியன்மார் பயங்கரவாத கும்பலிடம் சிக்குண்டுள்ளனர்.

மியன்மாரின் பயங்கரவாத குழுவின் சைபர் குற்றங்களுக்கான பகுதியொன்றில் உள்ள முகாமில் இலங்கையர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதக் குழுவினர் இவர்களை சித்திரவதை செய்கின்றனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இவர்களை விடுவிப்பதற்காக தலா ஒரு நபரிடமிருந்து 8000 அமெரிக்க டொலர்களை பயங்கரவாத குழுவினர் கோருகின்றனர்.

இது குறித்து அறிந்துள்ளதாக மியன்மாருக்கான இலங்கைதூதுவர் தெரிவித்துள்ளார். மியன்மார் அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தைகளின் பின்னர் 32 பேரை விடுவித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய 56 பேரையும் விடுதலை செய்வதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என தெரிவித்துள்ள தூதுவர் சட்டவிரோதமான வழிமுறைகள் மூலம் இலங்கயைர்களை மியன்மார் அல்லது தாய்லாந்துக்கு செல்ல முயலவேண்டாம் என கேட்டுக்கொண்டார்.

(அ)

# பேருவளை துறைமுகம் உள்ளிட்ட பகுதிகளில் அதிரடிப்படை, பொலிஸார் திடீர் சோதனை!

கொழும்பு, டிசெ. 20

கடலில் இடம்பெறும் போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பேருவளை மீன்பிடித் துறைமுகம் மற்றும் அதனைச் சூழவுள்ள வீட்டுத் தொகுதிகள் நேறறு செவ்வாய்க்கிழமை அதிகாலை சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

பேருவளை, பயாகல, அளுத்கம, வெலிப்பன்ன ஆகிய பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த சுமார் இருநூறு பொலிஸ் உத்தியோகத்தர்களும் கட்டுக்குருந்த பயிற்சி முகாமைச் சேர்ந்த விசேட அதிரடிப்படையினரும் இந்த நடவடிக்கையில் இணைந்தனர்.

பேருவளையிலிருந்து மீன்பிடி நடவடிக்கைகளுக்காக புறப்படும் மற்றும் திரும்பும் பெருந்தொகையான படகுகள் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினரால் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

(அ)

# இமாலய பிரகடனம் தெளிவற்றது

## கூறுகிறது அஸ்கிரிய பீடம்

கொழும்பு, டிசெ. 20

பன்முகத்தன்மை கொண்ட சமூகத்தை கட்டியெழுப்புவதற்காக தமிழ் புலம்பெயர் அமைப்பான உலகதமிழர் பேரவை பௌத்தமதகுருமார்கள் குழுவொன்றுடன் இணைந்து முன்னெடுத்துள்ள இமாலய பிரகடனம் தெளிவற்றது என தெரிவித்துள்ள அஸ்கிரிய பீடம் எனினும் முன்னேற்றகரமான விடயங்கள் இடம்பெற்றால் அதற்கு பௌத்தமதகுருமார் ஆதரவளிப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் உலக தமிழர் பேரயையும் பௌத்தமதகுருமாரும் இணைந்து இமாலயப்பிரகடனத்தினை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்திருந்தனர்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அஸ்கிரிய பீடத்தின் பேரவைகளின் செயலாளர் மெதகம தம்மானந்த தேரர், தேசிய ஐக்கியத்தினையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு எடுக்கப்படும் எந்த முயற்சிகளையும் அஸ்கிரிய பீடம் குழப்பாது என தெரிவித்துள்ளார்.

எனினும் அது நாட்டின் சகவாழ்விற்கும் ஒருமைப்பாட்டிற்கும் தீங்கு விளைவிக்காமல் இருந்தால் மாத்திரமே அதற்கு ஆதரவளிப்போம் எனஅவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பிரகடனத்தின் நோக்ககங்கள் தெளிவற்றதாக உள்ளது என தெரிவித்துள்ள அவர் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் இந்த பிரகடனத்தின் நோக்கம் தெளிவாக இல்லை அதிகாரிகள் பிரகடனம் நோக்கம் குறித்து கவனம் செலுத்தவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏதாவது சிறந்த விடயங்கள் இடம்பெறவேண்டும் என அஸ்கிரிய பீடம் விரும்புகின்றது குறிப்பிட்ட பிரகனடத்தை நடைமுறைப்படுத்துவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து கருத்து தெரிவிக்கப்போவதில்லை எனவும் அவர் கூறினார்.

(அ)

# உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு தீர்வு

கொழும்பு, டிசெ. 20

உள்ளூராட்சி தேர்தல் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டமையால் தோன்றியுள்ள பிரச்னைகளை தீர்ப்பதற்கான குழுவொன்றை நியமிப்பது பொருத்தமானதென தேர்தல்கள் ஆணையார் நாயகத்தினால் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலுள்ள விதந்துரைகளை அமுல்படுத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உடன்பாடு கிடைத்துள்ளது.

அந்த குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில் பின்வரும் வகையில் செயற்படுவதற்காக பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூாராட்சி அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தேர்தலில் போட்டியிடும் அதிகார எல்லையிலிருந்து வெளியேயுள்ள சேவை நிலையத்துக்கு இடமாற்றம் செய்தமையால், சிரமத்துக்குள்ளான அரசியல் உரிமை கொண்ட அலுவலர் ஒருவர் அது தொடர்பாக மேன்முறையீடு செயற்பாட்டின், நிறுவன தலைவர் அது தொடர்பாகக் கவனம் செலுத்தி குறித்த சேவை நிலையத்தில் அரசியல் கருமங்களிலோ அல்லது அரசியல் பரப்புரைகளில் ஈடுபடாமல் பணியாற்றுவதாக குறித்த அலுவலரிடமிருந்து சத்தியக் கடதாசியொன்று பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் அலுவலரின் நிரந்தர சேவை நிலையத்திற்கு கடமைக்கு செல்வதற்கு இடமளித்தல்.

2023-04-25 திகதி தொடக்கம் 2023-04-08 ஆம் திகதி வரையான காலத்தை சம்பளத்துடனான விடுமுறையாக கருதி அடிப்படை சம்பளம் வழங்குதல். 2023 உள்ளூராட்சி தேர்தலுக்காக வேட்புமனு நியமனப் பத்திரங்களை சமர்ப்பித்துள்ள அலுவலர்கள் 2023-05-08 திகதி 07 -2023 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய கட்டாயமாகக் கடமைக்கு சமூகமளிக்குமாறு பணித்தல்.

அதற்கமைய, அரசியல் உரிமை கொண்ட அரச அலுவலர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மேற்குறித்த விடயங்கள் அடங்கலாக பொது நிர்வாக சுற்றறிக்கையை வெளியிடுதல் என்பவற்றுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

(அ)

# பெண்கள், குழந்தைகளின் முறைப்பாடுகளுக்காக ஜனவரி I முதல் 24 மணி நேர தொலைபேசி எண்

கொழும்பு, டிசெ. 20

பெண்கள் மற்றும் குழந்தைகள் எதிர்கொள்ளும் துன்புறுத்தல் மற்றும் ஒடுக்குமுறைகளை கையாள்வதற்காக ஜனவரி 1 முதல் 24 மணி நேர தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்படும் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

நாட்டின் எங்கிருந்தும் எந்த மொழியிலும் பிரச்னைகளை ஹொட்லைன் எண்ணின் மூலம் தெரிவிக்க முடியும் என்று கூறிய அமைச்சர், பெண் காவல்துறை அதிகாரிகளால் இயக்கப்படும் இந்த அழைப்பு மையத்தின் மூலம் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் மிகவும் நம்பகமான சேவை மற்றும் அவர்களின் தனியுரிமை பாதுகாப்பு வழங்கப்படும்-என்றார்.

(அ)

# மன்னாரில் மாணவன் அதிபரால் துஷ்பிரயோகம்

## சம்பவத்தை மூடி மறைக்க முயற்சி

மன்னார், டிசெ. 20

மன்னார் கரிசல் பகுதியைச் சேர்ந்த 14 வயது சிறுவன் பாடசாலை அதிபரால் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சம்பவம் ஒன்று கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது.

பாடசாலை சுற்றுப்புற சூழலை சுத்தம் செய்யும் நிகழ்வு என அறிவித்து குறித்த மாணவனை அழைத்து அதிபர் துஷ்பிரயோகத்தை மேற்கொண்டதாக தெரிய வருகிறது.

இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் மாணவன் பெற்றோருக்கு அறிவித்த நிலையில் பெற்றோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாடசாலை சென்ற போது அதிபர் பாடசாலையை விட்டு வெளியேறியுள்ளார்.

மறுநாள் திங்கட்கிழமை பெற்றோர் பாடசாலை சென்ற நிலையில் அதிபர் பாடசாலைக்கு சமூகமளிக்கவில்லை.

இந்நிலையில் அப்பகுதியில் இயங்கும் பாடசாலை நிர்வாகத்தினர் பாடசாலை அதிபர் மற்றும் மாணவனை அழைத்து சமரச பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இருப்பினும் குறித்த மாணவனின் குடும்பத்தினர் எருக்கலம் பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய சென்ற நிலையில் அங்கு சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு இல்லை என அறிவிக்கப்பட்டு மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் அதிபரால் குறித்த துஷ்பிரயோகம் இடம் பெற்ற போதிலும் அதிபர் சார்பாக சிலரின் அழுத்தம் மற்றும் நிர்வாகத்தினரின் அழுத்தம் காரணமாக குறித்த விடயம் மன்னார் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்படவில்லை என தெரிய வந்துள்ளது.

இருப்பினும், குறித்த விடயத்தில் வலயக்கல்வி பணிப்பாளர் மற்றும் சம்பந்தப்பட்ட பொலிஸ் பிரிவினர் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மாணவனை சட்டவைத்திய அதிகாரி முன்னிலைப்படுத்தி பாதிக்கப்பட்ட மாணவனுக்கு நீதியை பெற்று கொடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ)

# 65 வயதில் ஓய்வு பெறுவேன்!

## காரைதீவில் அறிவித்தார் சுமந்திரன்

காரைதீவு, டிசெ. 20

**"புதிய தலைவர் தெரிவால் கட்சி ஒருபோதும் பிளவடையாது. அது கட்சிக்கு மேலும் வலுச்சேர்க்கும். எனக்கு இன்னும் இரண்டு மாதங்களில் 60 வயது. 65இல் நான் ஓய்வு பெறுவேன்."**

**-இவ்வாறு இலங்கை தமிழர் கட்சியின் ஊடக பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை காரைதீவில் தெரிவித்தார்.**



இலங்கை தமிழர் கட்சியின் காரைதீவு பொதுச் சபை உறுப்பினர்களின் சந்திப்பு நேற்று முன் தினம் மாலை காரைதீவு தமிழரசுக் கட்சி கிளைத்தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் கட்சி கிளைப் பணிமனையில் நடைபெற்றது.

அச்சமயம் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் இரா. சாணக்கியன் மற்றும் இளைஞர் அணி துணைத் தலைவர் அருள். நிதாஞ்சன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

அங்கு சுமந்திரன் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை தமிழரசுக்கட்சி ஜனநாயக சிறப்பம்சம் கொண்ட கட்சியாகும். இப்படியான தேர்தல் இயண்டு வருடத்திற்கு ஒரு தலைவர் என்றால் கட்சி மேலும் வலுப்பெறும்.

எமது கட்சி போன்று எந்த கட்சியிலும் ஜனநாயக விழுமியங்கள்இல்லை.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸில் பொன்னம்பலம் என்பவர் மாத்திரம் தான் தலைவராக வரலாம்.

எனக்கு இரண்டு மாதங்களில் 60 வயது. 65 வயதில் இளைப்பாறி விடுவேன்.

எனக்கு முன்னர் இருந்த தலைவர்கள் விட்ட தவறை நாங்கள் ஒருபோதும் நான் விடப் போவதில்லை.

2010 இல் இருந்து நான் சம்மந்தர் அவர்களோடு கட்சி செயற்பாடு அத்தனையிலும் பக்கபலமாக இருந்து வந்திருக்கின்றேன். கட்சி மட்ட பேச்சு வார்த்தைகள் அனைத்திலும் பங்கு பற்றியுள்ளேன்.

தலைவர் தெரிவுக்கு நான் சம்மதம் தெரிவித்துள்ளேன்.

அடுத்த கட்ட தேசிய முயற்சிக்கு புதிய தலைவரை நீங்கள் தேர்வு செய்து கொள்ளுங்கள்- என்றார்.

(அ)




# மலேரியா ஒழிப்பு ஊழியர்களுக்கு கௌரவிப்பு

கல்முனை, டிசெ. 20

கல்முனை பிராந்திய மலேரியா தடை இயக்க பிரிவின் நலன்புரிச் சங்கத்தினால் மலேரியா ஒழிப்பிற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மலேரியா தடை இயக்க பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.எம்.நௌஷாத் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாகவும், நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம். பீ.அப்துல் வாஜித், பிராந்திய பொதுச் சுகாதார மற்றும் தர முகாமைத்துவ பிரிவுகளின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஏ.ஹில்மி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், கணக்காளர் உசைனா பாரிஸ் விசேட அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அனுசரணையின் கீழ் நடாத்தப்பட்ட தெரிவின் பிரகாரம் பிராந்திய மலேரியா தடை இயக்க பிரிவில் திறம்பட பணியாற்றிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பலரும் இந்நிகழ்வின் போது சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் சுமார் 18 வருடங்கள் குறித்த பிரிவில் பணியாற்றி ஓய்வு பெற்ற என்.சந்திரலிங்கம் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த குறித்த பிரிவு உத்தியோகத்தர்களின் பிள்ளைகளும் இந்நிகழ்வின் போது அதிதிகளினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

(அ)



# காட்டு யானைகளால் வீடுகள் சேதம்

அம்பாறை, டிசெ. 20

காட்டு யானைகளின் இடைவிடாத அட்டகாசத்தால் அம்பாறை மாவட்டத்தின் பங்தாறுவ கிராம மக்கள் தினசரி இரவும் பகலும் நிம்மதியிழந்து பல விதமான இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

இவ்விடயமாக இப்பிரதேசத்திற்கு பொறுப்பாகவுள்ள வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரி அஜித் குணரெட்ண தமக்கு வழங்கப்பட்ட வாகனம் பழுதடைந்துள்ள நிலையில் அம்பாறை பிரதேச செயலகத்திடமும் மாவட்ட செயலகத்திடமும் வாகன வசதி செய்து தரும்படி பலமுறை கேட்டும் இதுவரை எதுவித பதிலும் கிடைக்கவில்லை என்று தெரிவித்ததுடன், மோட்டார் சைக்கிளில் சென்று யானைக் கூட்டத்தை துரத்த தமது குழுவால் முடியாதுள்ளது என்று தெரிவித்தார்.

விவசாயத்தையே ஜீவனோபாயமாக கொண்டுள்ள இப்பிரதேச மக்கள் அடுத்த போகத்திற்காக சேமித்து வைத்திருந்த விதை நெல் அனைத்தையுமே காட்டு யானைகள் உண்டு தீர்த்துள்ளதாக விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

(அ)

# தென்கிழக்கு பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கு இலகு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப் பட்டறை

அம்பாறை, டிசெ. 20

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக தொழிலாளர் மேம்பாட்டு மையம் ஏற்பாடு செய்திருந்த பயிற்சி பட்டறை ஒன்று காஞ்சிரங்குடா கால்நடை வளர்ப்பு விவசாய பயிற்சி நிலையத்தில் தொழிலாளர் மேம்பாட்டு மையத்தின் தலைவர் பேராசிரியர் சல்பியா உம்மா தலைமையில் இடம்பெற்றது.

ஊழியர்கள் தங்களது கருமங்களை இலகுவாக ஆற்றுவதற்கான பல்வேறு யுக்திகளை பயிற்சி பட்டறையின் வளவாலர்களாக கலந்துகொண்ட பேராசிரியர் எம்.சி.ஏ. நாசர், மற்றும் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.சபீனா ஹசன் எம்.ஜி. கலாநிதி எம்.ஐ. நௌபல் ஆகியோர் எடுத்துக் கூறினார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களில் 50 பேர் குறித்த வதிவிட பயிற்சி பட்டறையில் இணைத்துக் கொள்ளப் பட்டிருந்தனர்.



தொடர்ச்சியாக அலுவலக கடமைகளில் ஈடுபட்டு வருவதால் ஏற்படும் சோர்வு நிலை போக்கி ஊழியர்கள் ஓரிடத்தில் ஒன்று கூடியதால் தாங்களிடையே அந்நியோன்யம் மேலும் அதிகரித்துள்ளதாக இங்கு கலந்து கொண்ட ஊழியர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

குறித்த பயிற்சி பட்டறையில் தான் பல்வேறு புதிய விடையங்களை அறிந்து கொண்டதாகவும் இவ்வாறான பயிற்சி நிகழ்வுகள் இன்னும் இடம்பெறவேண்டும் என்றும் பயிற்சி பட்டறையை ஏற்பாடு செய்திருந்த பேராசிரியர் சல்பியா உம்மா உள்ளிட்ட அணியினருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் இன்னும் ஒருவர் கருத்து வெளியிட்டார்.

(அ)

# புத்தாண்டை முன்னிட்டு விசேட சுற்றிவளைப்பு

அம்பாறை, டிசெ. 20

புத்தாண்டை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தில் வர்த்தக நிலையங்களில் விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மேலும், சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்து சீனியை பதுக்கி வைத்து கூடுதலான விலைக்கு விற்பனை செய்து வரும் வர்த்தகர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர்களால் மாவட்டத்திலுள்ள சகல வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்தியவசியப் பொருட்களைப் பதுக்கி வைத்தல், நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல், பொருட்களை பதுக்கி வைத்து சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்தல், நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை விற்பனை செய்தல் பாரிய குற்றமாகுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# சீனாவில் நிலநடுக்கம் 116 பேர் உயிரிழப்பு!



பீஜிங், டிசெ. 20

சீனாவின் வடமேற்கு பகுதியான கொன்சு மற்றும் கின்காய் மாகாணங்களில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை 116 ஆக அதிகரித்துள்ளது. நிலநடுக்கத்தின் தாக்கம் ரிக்டர் அளவில் 6.2 ஆகப் பதிவாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு நிலநடுக்கம் ஏற்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்தன. நிலநடுக்கத்தால், கொன்சு மற்றும் கின்காய் மாகாணங்களின் சில கிராமங்களில் மின்சாரம் மற்றும் தண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளன. மீட்புப் பணிகள் நேற்று காலை முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான உத்தரவை ஜனாதிபதி ஜி ஜின்பிங் பிறப்பித்துள்ளார்.

நிலநடுக்கத்தால் பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது. வீடுகளில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளமையால் மக்கள் வீதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர் என்று அறிய வருகின்றது. நிலநடுக்கத்தால் 116 பேர் பலியாகியுள்ள நிலையில், 200 பேர் காயமடைந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் மருத்துவ பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. மீட்பு பணிகளில் 88 தீயணைப்பு இயந்திரங்களுடன் 580 மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். (ஐ)



## ஐஸ்லாந்தில் எரிமலை வெடிப்பு 4 ஆயிரம் மக்கள் வெளியேற்றம்

ரெய்க்ஜேன்ஸ், டிசெ. 20

ஐஸ்லாந்து நாட்டில் எரிமலை தீப்பிழம்பை கக்கி வருகின்றது. இதனால், நான்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஐஸ்லாந்து நாட்டின் ரெய்க்ஜேன்ஸ் தீபகற்பத்தில் உள்ள எரிமலை வெடித்து சிதற தொடங்கியுள்ளது. கிரின்டாவிக் நகரத்தில் இருந்து 4 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இந்த எரிமலை நேற்றுமுன்தினம் இரவு தீப்பிழம்பை கக்கி வருகிறது. கடந்த ஒரு வாரமாக குமுறிக் கொண்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் வெடித்து சிதறியுள்ளது.

எரிமலை வெடிப்பு காரணமாக கிரின்டாவிக் பகுதியில் வசிக்கும் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர். மேலும் அவர்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

எரிமலை வெடிப்புக்கு சில மாதங்களுக்கு முன்பு ரெய்க்ஜேன்ஸ் தீபகபகத்தில் ஆயிரக்கணக்கான நிலநடுக்கங்கள் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காஸா அகதி முகாம் மீது இஸ்ரேல் படை தாக்குதல்



காஸா, டிசெ. 20

இஸ்ரேல் - ஹமாஸ் போர் 100 நாட்களைக் கடந்து நடைபெற்று வரும் நிலையில், இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதலில் வடக்கு காஸாவின் ஜபாலியாவில் உள்ள அகதிகள் முகாமில் 10இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அதேபோல் ரபாவில் மூன்று குடியிருப்புகள் குண்டு வீசி தகர்க்கப்பட்டது. இதில், 29 பேர் பலியாகினர். பலர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. ரபாவில் இஸ்ரேலிய படைகள் நடத்திய தாக்குதலில் அடெல் ஜரோப் என்ற பத்திரிகையாளரும் உயிரிழந்தார்.

கடந்த ஒக்ரோபர் 7-ஆம் திகதி தொடங்கிய திலிருந்து இதுவரை இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காசாவில் பெண்கள், குழந்தைகள் உள்பட 19 ஆயிரத்து 453 பேர் கொல்லப்பட்டனர். இஸ்ரேல் - ஹமாஸ் குழுக்கள் மாறி மாறி தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதில் அப்பாவி பொதுமக்கள் தங்களது இன்னுயிரை இழந்து வருகின்றனர். இந்நிலையில், அப்பாவி மக்களின் உயிரைக் காக்க காஸாவில் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தி ஐ. நா. பொதுச் சபையில் அண்மையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா உள்ளிட்ட 153 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. அமெரிக்கா, இஸ்ரேல், ஆஸ்திரியா உள்ளிட்ட 10 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. இஸ்ரேல் போருக்கு அமெரிக்ககூட ஆதரவை தளர்த்தி வருகிறது.

இந்த நிலையில், இஸ்ரேல் தனது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதலில் வடக்கு காஸாவின் ஜபாலியாவில் உள்ள அகதிகள் முகாமில் 10இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அதேபோல் ரபாவில் மூன்று குடியிருப்புகள் குண்டு வீசி தகர்க்கப்பட்டதில் 29 பேர் பலியாகினர். பலர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. ரபாவில் இஸ்ரேலியப் படைகள் நடத்திய தாக்குதலில் அடெல் ஜரோப் என்ற பத்திரிகையாளரும் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## செவ்வாய் கிரகத்தில் மனிதர்களுக்கு நகரம்!

சான் பிரான்சிஸ்கோ, டிசெ. 20

மனிதர்களுக்கு செவ்வாய் கிரகத்தில் நகரங்கள் இருக்க வேண்டும் என எக்ஸ் தளத்தின் உரிமையாளர் எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

மனிதர்கள் செவ்வாய் கிரகத்துக்கு செல்வது குறித்து பல்வேறு தருணங்களில் மஸ்க் பேசியுள்ளார். இந்நிலையில், தற்போது மீண்டும் எக்ஸ் தளத்தில் அது குறித்து ருவிற் செய்துள்ளார்.

பூமியை கடந்து பிற கோள்களில் பல்வேறு ஆராய்ச்சி பணிகளை உலக நாடுகள் மேற்கொண்டு வருகின்றன. இந்தப் பணியில் அமெரிக்கா, சீனா, இந்தியா போன்ற நாடுகள் ஈடுபட்டு வருகின்றன. அதே நேரத்தில் மனிதர்களை செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பும் சாத்தியம் குறித்து பேசி வருகிறது எலான் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம்.

இந்நிலையில், செவ்வாய் கிரகத்தில் மனிதர்களுக்கு நகரம் வேண்டும் என மஸ்க் ட்வீட் செய்துள்ளார். "மனிதர்கள் நிலவில் தரையிறங்கி 66 ஆண்டுகள் ஆகின்றன. கடைசியாக மனிதர்கள் நிலவில் தரையிறங்கி அரை நூற்றாண்டு காலம் கடந்துவிட்டது என்பதை நாம் கருத்தில் கொள்ள



வேண்டும். இது மனித நாகரிகத்தின் உயர்ந்த அடையாளமாக இருக்க முடியாது.

மானுடர்களுக்கு நிலவில் பேஸ் (மூன் பேஸ்) இருக்க வேண்டும், செவ்வாய் கிரகத்தில் நகரங்கள் இருக்க வேண்டும். மனிதர்கள் நட்சத்திரங்களுக்கு இடையே இருக்க வேண்டும்" என மஸ்க் தெரிவித்துள்ளார். கடந்த 1903இல் ரைட் சகோதரர்கள் விமானத்தில் முதல் முறையாக பறந்தது குறித்த ட்வீட் ஒன்றுக்கு மஸ்க், இப்படி பதில் ட்வீட் பதிவிட்டுள்ளார். (ஐ)



## இந்திய பாராளுமன்றத்தில் 141 எம். பிக்கள் இடைநீக்கம்

புதுடில்லி, டிசெ. 20

இந்திய பாராளுமன்றத்தில் அமளியில் ஈடுபட்ட மேலும் 49 எம்.பிக்கள் நேற்று இடைநீக்கம் செய்யப்பட்டனர். மக்களவை நேற்று காலை கூடியதும் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. கடந்த 13ஆம் திகதி மக்களவையில் நிகழ்ந்த பாதுகாப்பு அத்துமீறல் குறித்து பிரதமர் மோடி அல்லது உள்துறை அமைச்சர் அமித் ஷா அவைக்கு வந்து விளக்கம் அளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி 90இற்கும் மேற்பட்ட எம். பிக்கள் இடைநீக்கம் செய்யப்பட்டமையை கண்டித்தும் அவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் அமளியில் ஈடுபட்டனர். அந்த பதாகைகளில் பிரதமர் மோடியின் படம் விகாரமாக சித்தரிக்கப்பட்டிருப்பதாகக் கூறி சபாநாயகர் கண்டித்தார். பதாகைகளை ஏந்த வேண்டாம் என்றும் அவர் வலியுறுத்தினார். எதிர்க்கட்சி எம். பிக்கள் ஏற்காததால், அவை கூடிய சிறிது நேரத்துக்குள் அவையை அவர் ஒத்திவைத்தார்.

நண்பகல் 12 மணிக்கு அவை மீண்டும் கூடியதும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் மீண்டும் அமளியில் ஈடுபட்டனர். இதையடுத்து, அவையை நடத்திய ராஜேந்திர அகர்வால் அவையை பகல் 12.30 மணிக்கு ஒத்திவைத்தார். மீண்டும் அவை கூடியபோது மீண்டும் எம்.பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். இதையடுத்து சசி தரூர் மணிஷ் திவாரி ஃபரூக் அப்துல்லா உள்ளிட்ட 49 எம். பிக்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக அவை மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் பாதுகாப்பு குறைபாடு தொடர்பாக பிரதமர் மோடி அல்லது மத்திய உள்துறை அமித் ஷா விளக்கம் அளிக்கக் கோரி அமளியில் ஈடுபட்டதால் திங்கள்கிழமை மட்டும் காங்கிரஸ் எம்.பிக்கள் உட்பட எதிர்க்கட்சிகளை சேர்ந்த 45 எம்.பிகள் இடைநீக்கம் செய்யப்பட்டனர். ஏற்கெனவே மாநிலங்களவையில் திரிணாமூல் காங்கிரஸ் எம். பி. டெரிக் ஓ பிரையன் கடந்த 14ஆம் திகதி இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தார். இதையடுத்து மாநிலங்களவையில் இடைநீக்கம் செய்யப்பட்ட எம்.பி.க்கள் எண்ணிக்கை 46 ஆக உயர்ந்தது.

இந்நிலையில், மக்களவையில் அமளியில் ஈடுபட்ட மேலும் 49 எம்.பிக்கள் நேற்று இடைநீக்கம் செய்யப்பட்டனர். இதனால், ஒட்டுமொத்தமாக இதுவரை இந்தக் கூட்டத்தொடரில் இடைநீக்கம் செய்யப்பட்ட எம்.பி.க்களின் எண்ணிக்கை 141 ஆக அதிகரித்துள்ளது. பாராளுமன்ற வரலாற்றில், ஒரு கூட்டத் தொடரில் இத்தனை எம்.பிக்கள் இடைநீக்கம் செய்யப்பட்டமை இதுவே முதல் சம்பவமாகும். (ஐ)

# அடுத்த 5 வருடங்களில் நாடு கடன் நெருக்கடியில் சிக்கும்

## பொருளாதார மீட்சிக்கான ஊழல் எதிர்ப்பு சீர்திருத்த சிவில் சமூகக் கூட்டமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 20

**நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு அரச மற்றும் ஊழல் எதிர்ப்பு மறுசீரமைப்புக்கள் இன்றியமையாதவையாகும். இம் மறுசீரமைப்புக்களுக்கு உரியவாறான முக்கியத்துவம் வழங்கப்படாவிடின், அடுத்த 5 ஆண்டுகளில் இலங்கை மீண்டும் கடன்நெருக்கடியில் சிக்கிக்கொள்ளக்கூடிய அபாயம் காணப்படுவதாக 6 அமைப்புக்களை உள்ளடக்கிய 'பொருளாதார மீட்சிக்கான ஊழல் எதிர்ப்பு சீர்திருத்த சிவில் சமூகக் கூட்டமைப்பு' எச்சரித்துள்ளது.**

நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு அவசியமான ஊழல் எதிர்ப்புசார் மறுசீரமைப்புக்களில் நிலவும் முன்னேற்றமின்மை குறித்து ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா, வெரிட்டே ரிசேர்ச், மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு, சர்வோதயம் மற்றும் தேசிய சமாதானப்பேரவை ஆகிய 6 அமைப்புக்கள் அடங்கிய 'பொருளாதார மீட்சிக்கான ஊழல் எதிர்ப்பு சீர்திருத்த சிவில் சமூகக் கூட்டமைப்பு' வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;-

நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு அரச மற்றும் ஊழல் எதிர்ப்பு மறுசீரமைப்புக்கள் இன்றியமையாதவையாகும். இம்மறுசீரமைப்புக்களுக்கு உரியவாறான முக்கியத்துவம் வழங்கப்படாவிடின், அடுத்த 5 ஆண்டுகளில் இலங்கை மீண்டும் கடன்நெருக்கடியில் சிக்கிக்கொள்ளக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.

இலங்கை தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மறுசீரமைப்பு யோசனைகளை பெரிதும் வரவேற்கின்றோம். இருப்பினும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழலுக்கு எதிரான முக்கிய நடவடிக்கைகள் போன்றவற்றைக் கூட அரசாங்கம் இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லை.

புதிதாக நிறைவேற்றப்பட்ட ஊழல் எதிர்ப்புச்சட்ட அமுலாக்கம் உள்ளடங்கலாக ஏற்கனவே இணங்கப்பட்ட ஊழல் எதிர்ப்புச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதிலும், அவற்றை உரியவாறு கட்டமைப்பதிலும் அரசாங்கம் மிக மந்தகரமாக செயற்படுவதாகவும், அவை முழுமையடையாமல் இருப்பதாகவும் சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் அண்மையகாலங்களில் அரசாங்கம் சில தீர்க்கமான முடிவுகளை எடுத்துவருகின்றது. அதனடிப்படையில் ஊழலை முடிவுக்குக்கொண்டு வருவதற்கான செயற்திட்டங்களை புறக்கணிக்கும் அணுகுமுறையை அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவேண்டுமென நாம் வலியுறுத்துகின்றோம்- என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# அசானிக்கு இன்று அமோக வரவேற்பு!

கொழும்பு, டிசெ. 20

மலையக குயில் அசானிக்கு இன்று அமோக வரவேற்பளிக்கப்படவுள்ளது.

கம்பளை பிரதேச சபை வளாகத்துக்கு முன்னால் இன்று முற்பகல் 9.30 மணிக்கு வரவேற்பு ஆரம்பமாகும். அதன்பின்னர் வாகன பேரணியில் அவர் நயாப்பனை தோட்டம்வரை அழைத்துச்செல்லப்படவுள்ளார்.

நயாப்பான தோட்ட மக்கள், இளைஞர்கள் ஆகியோராலேயே நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று சமூக - அரசியல் செயற்பாட்டாளரான தம்பி கனகரட்னம் தனது முகநூல் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பங்கேற்குமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(அ)



# பாரிய மரம் முறிந்து விழுந்ததில் மோட்டார் சைக்கிள்கள் சேதம்!

கொழும்பு, டிசெ. 20

கண்டி நகரின் வடுகடபிட்டிய வீதியில் பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் வீதியின் இருபுறங்களிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பத்துக்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் பாரிய சேதத்திற்கு உள்ளாகியுள்ளன.

கனமழை காரணமாக மரம் முறிந்து விழுந்ததால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

கண்டி மாநகர தீயணைப்பு பிரிவினர், பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இணைந்து மரத்தை அகற்றி வீதியை திறக்கும் பணியில் ஈடுபட்டனர்.

(அ)

# சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ. 20

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியின் நாட்டிற்கு 13 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இதனிடையே டிசெம்பர் முதலாம் திகதி முதல் கடந்த ஞாயிற்றுக்கிழமை வரையில் ஒரு இலட்சத்து 750 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில் இந்தியாவில் இருந்து 20 ஆயிரத்து 597 சுற்றுலாப் பயணிகளும், ரஷ்யாவிலிருந்து 14 ஆயிரத்து 156 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 10 ஆயிரத்து 281 சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்துள்ளனர். ஜேர்மனி, சீனா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, பிரான்ஸ், கனடா மற்றும் போலந்து ஆகிய நாடுகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவு செய்யப்பட்டுள்ளது.

(அ)

# அரிசி இறக்குமதிக்கு தனியாருக்கு அனுமதி?

கொழும்பு, டிசெ. 20

கீரி சம்பா வகை அரிசிக்கு சமமான 50 ஆயிரம் மெட்ரிக் தொன் ஜி.ஆர். 11 வகை அரிசியை இறக்குமதி செய்ய தனியார் துறையினருக்கு வாய்ப்பு வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சந்தையில் அரிசி விலையை கட்டுப்படுத்துவதற்காக உணவு கொள்கைகள் குழுவின் விதந்துரைக்கு அமைய 50,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்காக நவம்பர் 20 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

உள்நாட்டுச் சந்தையில் கீரிச் சம்பா அரிசி மற்றும் சம்பா அரிசி ஆகியவற்றின் விலைகளில் போட்டித்தன்மையை ஏற்படுத்தி, விலையின் நன்மையை நுகர்வோருக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, கீரி சம்பா அரிசிக்கு சமமான 50,000 மெற்றிக் தொன் ஜி.ஆர். 11 அரிசியை தனியார் துறை மூலம் இறக்குமதி செய்வதற்காக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# அவுஸ்திரேலிய மிருகக்காட்சிசாலையில் பெண்ணை கொன்ற இலங்கையர் கைது!

கொழும்பு, டிசெ. 20

அவுஸ்திரேலியாவின் கான்பெர்ரா மிருகக்காட்சிசாலையில் உள்ள ஒரு சமையலறை அங்காடி அறையில் இளம் பெண் சக ஊழியரை கத்தியால் குத்தி கொலை செய்த குற்றச்சாட்டில் இலங்கையை பின்னணியை கொண்ட சமையல்காரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

29 வயதான ஜூட் விஜேசிங்க கடந்த திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலை சம்பவத்தின் பின்னர் ஜூட் விஜேசிங்க தனக்குத்தானே கத்தியால் குத்தியுள்ளார். அவர் காயங்களுடன் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

பாதிக்கப்பட்டவர் 29 வயதான பூட்டான் நாட்டவர்.

விஜேசிங்க மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

"அந்த நபருக்கு பிணை மறுக்கப்பட்டது, அடுத்ததாக 4 ஏப்ரல் 2023 அன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார்." என பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரை அடையாளம் காணப்படாத பெண், யர்ரலும்லாவின் தேசிய மிருகக்காட்சிசாலை மற்றும் மீன்வளத்தில் உள்ள வணிக சமையலறையில் மதியம் 12.50 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டார்.

பிற்பகல் 2 மணியளவில் ஓக்ஸ் தோட்டத்திலுள்ள விஜேசிங்கவின் அடுக்குமாடி குடியிருப்பில் நுழைந்த பொலிஸார் பல மணி போராட்டத்தின் பின் அவரை கைது செய்தனர்.

"அவர் சுமார் ஒன்று முதல் இரண்டு வருடங்கள் இங்கே இருக்கிறார்," என்று ஒரு குடியிருப்பாளர் தெரிவித்தார்.

விஜேசிங்க தேசிய மிருகக்காட்சிசாலை மற்றும் மீன்வளத்தின் ஒரு பகுதியான ஜமாலா வனவிலங்கு விடுதியில் சமையல்காரராக இருந்தார். அவரது சமையல் படைப்புகளின் புகைப்படங்களை சமூக ஊடகங்களில் தவறாமல் பகிர்ந்து கொண்டார்.

அவர் இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. அவர் நாடு முழுவதும் சமையலறைகளில் வேலை செய்வதற்கு முன்பு அடிலெய்டில் படித்தார்.

அவரது சமூக ஊடகங்களில் ஜிம் செல்பிகள் மற்றும் மோட்டார் பைக் காட்சிகளின் புகைப்படங்கள் உள்ளன.

கான்பராவில் உள்ள ராயல் பூட்டான் தூதரகத்தின் முதல் செயலாளர் மெத்தோ டெமா பாதிக்கப்பட்டவர் பூட்டானைச் சேர்ந்தவர் என்று தெரிவித்தார்.

இளம் பெண்ணின் மரணத்தால் நெருக்கமான பூட்டான் சமூகம் ஆழமாக பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (அ)

# தேசிய அடையாள அட்டைக்கான புகைப்பட கட்டணம் அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ. 20

தேசிய அடையாள அட்டைக்கான டிஜிற்றல் புகைப்படக் கட்டணத்தை 150 ரூபாவில் இருந்து 400 ரூபாவாக உயர்த்தி பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

2016ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பை ரத்து செய்து, தேசிய அடையாள அட்டை டிஜிற்றல் புகைப்படங்களுக்கான அதிகபட்ச கட்டணமாக 150 ரூபாவாக நிர்ணயம் செய்து புதிய வர்த்தமானி அறிவிப்பை அமைச்சர் டிரான் அலஸ் வெளியிட்டார்.

குறித்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், புதிய கட்டணம் நேற்று முதல் அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

## இலங்கை...

கோரியுள்ள பின்புலத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இம்முறை ஆய்வுகளுக்கு ஷியாங் யாங் ஹொங் ( XIANG YANG HONG) 03 எனும் கப்பல் பயன்படுத்தப் படவிருந்தது. இந்த ஆய்வு அடுத்த ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி முதல் பெப்ரவரி 20 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும் என சீன தூதரகம் எழுத்து மூலமாக அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வட்டு...

இதேவேளை, மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த முன்னர் உயிரிழந்தவர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெல்லிப்பழை சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கை, மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உயிரிழந்த நபரை சேர்த்தமை தொடர்பான மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பிக்க ஆவன செய்யுமாறு நீதிமன்ற பதிவாளருக்குயாழ்ப்பாணம் நீதிவான் ஏ. ஏ. ஆனந்தராஜா உத்தரவிட்டார்.

மரண விசாரணை தொடர்பான கட்டளைக்காக எதிர்வரும் ஜனவரி 2ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. வழக்கில் உயிரிழந்த இளைஞர் சார்பில் பெருமளவான சட்டத்தரணிகள் முன்னிலையாகினர்.

வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞர் சித்திரவதைகளுக்கு உள்ளான நிலையில் நவம்பர் 19ஆம் திகதிஉயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புலம்பெயர்ந்த...

தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டின் அரசமைப்புக்கு அமைவாக அவர்களுக்கான கௌரவம், உரிமைகள் தொடர்பான புரிதலை ஏற்படுத்த வேண்டியது அவசியம். அதற்கான சிறந்த முயற்சிகளாக நட்டஈடு வழங்குதல், காணாமல் ஆக்கப்பட்டோரை தேடுதல் மற்றும் வழக்கு தொடுத்தல் போன்ற இயலுமைகளுடன் கூடிய குறிப்பிடத்தக்க அளவு அதிகாரம் கொண்ட உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவதற்கான சட்டமூலம் கொண்டு வரப்படவுள்ளது - என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி பணிமனையில் நடந்த தேசிய குடிபெயர்ந்தோர் தின நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## மின்கட்டணம்...

மின் கட்டணம் அதிகரிப்பட்டது.

குறித்த அதிகரிப்பின் பின்னர் மீண்டும் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் மின் கட்டண திருத்தத்தை மேற்கொள்ளவே நாங்கள் தீர்மானித்தோம்.

இருப்பினும் கடந்த இரண்டரை மாதங்களாக நிலவும் அதிக மழைவீழ்ச்சி மற்றும் எதிர்வரும் இரண்டு வாரங்களும் அவ்வாறான காலநிலையே காணப்படும் என்பதால் மீண்டும் மின் கட்டண திருத்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறு மின்சார சபை எமக்கு அறிவித்துள்ளது.

குறித்த மின் கட்டண திருத்தத்தின் போது அதிகரிக்கப்பட்ட மின் கட்டணத்தை குறைத்து மழைவீழ்ச்சியினால் கிடைக்கப்பெற்ற நன்மையை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கின்றோம்.

ஆதற்கமைவாக புள்ளிவிவரங்களை பரிசீலித்ததன் பின்னர் ஜனவரி மாதத்திற்குள் மின் கட்டண திருத்தத்தை மேற்கொள்ள எதிர்பார்க்கின்றோம்.

தற்போது கிடைக்கப்பெற்றுள்ள தரவுகளின் படி ஜனவரி மாதத்தில் பொதுமக்களுக்கு மின் கட்டண நிவாரணம் ஒன்றை பெற்றுக்கொடுக்க முடியும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்- என்றார். (அ)

## 4,806பேர்...

கதவுகளும் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றப்படுவதால் அப்பகுதியில் வாழும் மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## நான்கு...

தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சிசுவின் மரணத்துக்கான காரணம் அறியப்படாத நிலையில் உடல்கூறு மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ)

## சீரற்ற...

சேர்ந்த 3,052 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பாதிக்கப்பட்டுள்ளவர்களை தங்கவைக்கும் நோக்கில் இடைத்தங்கல் முகாம்களாக பயன்படுத்துவதற்காக வட மாகாணத்தின் 16 பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கிளிநொச்சி மாவட்டத்தில் 8 பாடசாலைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 பாடசாலைகளும், வவுனியா மாவட்டத்தில் ஒரு பாடசாலையும் அடங்கலாக 16 பாடசாலைகள் மூடப்பட்டன. (அ)

## கூகுள்...

கைது செய்யப்பட்டார்.

இந்த இளைஞர் உறவு முறையான சிறுமியை வன்புணர்ந்து அதனை காணொலியாக பதிவு செய்து கூகுள் ட்ரைவில் பதிவேற்றி வைத்திருந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் நீதிமன்ற உத்தரவின்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கூகுள் வழங்கிய தொடர்புடைய தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முதல் கைது இதுவாகும். (ஐ)

## 3 நாள்களில்...

கைது செய்யப்பட்ட நபர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களின் மருத்துவ அறிக்கை கிடைத்ததும் அவர்கள் நீதிமன்றங்களில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விசேட நடவடிக்கை வரும் நாள்களிலும் தொடரும் என்று தெரிவித்த பொலிஸார், போதைப் பொருள் வியாபாரிகள் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர்களை கைது செய்ய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர். (ஐ)

### உடுப்பிட்டி மதுபான சாலை விவகாரம்:

# அமைச்சர் டக்ளஸ் நேரில் வந்து தீர்வு பெற்று தருவதாக உறுதி!

வடமராட்சி, டிசெ. 20

உடுப்பிட்டியில் புதிதாக அமைந்த மதுபான சாலையை அகற்றுவது தொடர்பில் நேரில் வந்து பார்வையிட்டு தீர்வு பெற்றுத் தருவதாக தன்னை சந்தித்த அந்தப் பகுதியின் சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் உடுப்பிட்டி சமூகமட்ட அமைப்புகள் ஒன்று சேர்ந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்திருந்தபோதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார். இந்த சந்திப்பில், யாழ். மாவட்ட அரச அதிபர் சிவபாலசுந்தரன், கரவெட்டி பிரதேச செயலாளர் தயாரூபன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

கரவெட்டி பிரதேச செயலாளர் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் டக்ளஸ் தேவானந்தா தான் மதுபான சாலைக்கு உரிய அனுமதியை வழங்கச் சொன்னதற்கு அமைவாகவே தான் வழங்கியதாக குறிப்பிட்டிருந்தார். இந்த நிலையிலேயே இந்த சந்திப்பு நடைபெற்றது.

இந்த சந்திப்பில் பங்கேற்ற சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளிடம், இரண்டொரு நாட்களில் சம்பவ இடத்துக்கு நேரடியாக வந்து அதனை ஆராய்ந்து உரிய தரப்புகளுடன் பேசி மதுபானசாலையை அந்த இடத்தில் இருந்து அகற்றுவதற்குரிய உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

அத்தோடு மக்கள் எதிர்ப்புகள் இருந்தால் அந்த இடத்தில் மதுபான சாலை இயங்க அனுமதியை வழங்க முடியாதென யாழ். மாவட்ட செயலாளர் சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் உறுதிபட குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், கூட்டத்தில் சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் பிரதேச செயலாளர் மீது பல குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்ததுடன் சமூகமட்ட



அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் பிரதேச செயலாளருக்கும் இடையில் கடுமையான வாய்த்தர்க்கங்களும் ஏற்பட்டிருந்தது.

தினமும் ஆயிரக்கணக்கான மாணவர்கள், பொதுமக்கள் பயணிக்கும் ஒடுங்கிய உடுப்பிட்டி - வதிரி வீதியில் மதுபானசாலை அமைந்துள்ளதால் குறித்த இடத்தில் விபத்துகள் ஏற்படும் வாய்ப்புகளும் அதிகம் உள்ளது.

பாடசாலைகள், தனியார்கல்வி நிறுவனங்கள், பொதுமக்கள், சமூக மட்ட அமைப்புகளின் கடுமையான எதிர்ப்புகளையும் மீறி பிரதேசசெயலாளர் ஏன் செயல்படுகின்றார் என உடுப்பிட்டி வாழ் சமூக மட்ட அமைப்புகளின் குற்றஞ்சாட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்திய அரசின் நிதியுதவியில் 60 திறன் வகுப்பறைகள்

கொழும்பு, டிசெ. 20

இந்திய அரசின் நிதியுதவியுடன் நுவரெலியா, கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு உயர்தர வகுப்புக்களுக்கான 60 திறன் வகுப்பறைகளை நிறுவும் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இரண்டு வருடங்களில் நுவரெலியா, கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு உயர்தர வகுப்புக்களுக்கான 60 திறன் வகுப்பறைகளை நிறுவுகின்ற முன்னோடிக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிதியுதவி வழங்குவதற்கு இந்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

குறித்த முன்னோடிக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய பெறுகை திணைக்களத்தின் விதந்துரைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மதிப்பீட்டுச் செலவு 52. 6 கோடி ரூபாய் என்பதுடன், 2024 ஆம் ஆண்டுக்காக 31 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சுக்கும் இடையில் ஒப்பந்த மொன்றை மேற்கொள்வதற்காக பெருந் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

# ஹோமாகம வங்கியில் ஆயுததாரிகள் கொள்ளை

கொழும்பு, டிசெ. 20

ஹோமாகம பிட்டிபன பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி பிரஜாமுல வங்கிக்குள் துப்பாக் கியுடன் நுழைந்த இருவர் அங்கிருந்து சுமார் ஏழு இலட்சம் ரூபாவை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக ஹோமாகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

தலகல பிரதேசத்திலிருந்து வந்த கொள்ளையர்கள் பணத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு அதே திசையில் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# துயிலுமில்லத்தில் கைதான நான்கு பேருக்கு பிணை

மட்டக்களப்பு, டிசெ. 20

மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் கடந்த மாவீரர் தினத்தன்று அஞ்சலி நிகழ்வுகளில் கலந்துகொண்டபோது கைதுசெய்யப்பட்ட நான்கு பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

23 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணையில் வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றால் இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

எதிர்வரும் ஜனவரி மாதம் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவன் உட்பட நான்கு பேரே நேற்று பிணையில் விடுக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் கடந்த 27ஆம் திகதி மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்று முடிந்த நிலையில் அங்கு ஒழுங்கமைப்பில் ஈடுபட்டிருந்த நிதர்சன் மற்றும் மாணவனான வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தரம் பயிலும் நியூட்டன் தனுசாந்த் உட்பட நான்கு பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வாழைச்சேனை பொலிஸாரினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதியை சந்தித்த பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியிருந்தனர்.

அத்துடன் இவர்களது விடுதலை தொடர்பில் ஆரம்பம் முதல் இறுதி வரை மட்டக்களப்பு மாவட்ட சிவில் அமைப்புக்கள் நடவடிக்கையில் ஈடுபட்டன.

இந்நிலையில் நேற்று முன் தினம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய அவர்கள் பிணையில் விடுக்கப்பட்டனர்

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 1433 குடும்பங்கள் பாதிப்பு!

மட்டக்களப்பு, டிசெ. 20

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாக பிரிவுகளான கோரளைப்பற்று தெற்கு கிரானில் உள்ள ஐந்து கிராமங்களில் 941 குடும்பங்களும், போரதீவுப்பற்று வெல்லவெளியில் உள்ள நான்கு கிராமங்களில் 92 குடும்பங்களும், கோரளைப்பற்று வடக்கு வாகரையில் உள்ள இரண்டு கிராமங்களில் 319 குடும்பங்களும், எறாவூர்ப்பற்று செங்கலடியில் உள்ள எழு கிராமங்களில் 32 குடும்பங்களும் மண்முனை தென் மேற்கு பட்டிப்பளையிலுள்ள நான்கு கிராமங்களில் 47 குடும்பங்களும், மண்முனைப்பற்று ஆரையம்பதி மற்றும் கத்தான்குடியில் தலா ஒரு குடும்பம் வீதம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# ரெலிகொம் ஊழியர்கள் பகிஷ்கரிப்பு

கொழும்பு, டிசெ. 20

சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தை தனியார் மயமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தொலைத்தொடர்பு ஊழியர்கள் நேற்று முதல் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

சிறிலங்கா ரெலிகொம் ஊழியர்களின் சிறப்புரிமைகளை குறைத்து நிறுவனத்தை விற்பனை செய்ய நிறுவனத்தின் தலைவரும் பணிப்பாளர் சபையும் செயற்படுவதாகக் குற்றம் சுமத்தி நாடளாவிய ரீதியில் தொலைத்தொடர்பு ஊழியர்கள் இந்த பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளனர்.

இதன்படி, கொழும்பில் உள்ள சிறிலங்கா ரெலிகொம் தலைமையத்தின் முன்னால் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை நாடு முழுவதும் உள்ள சிறிலங்கா ரெலிகொம் ஊழியர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த வகையில், நுவரெலியா பிரதான தபால் நிலையத்திற்கு அருகில் நுவரெலியா சிறிலங்கா ரெலிகொம் நிறுவன ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# நெருக்கடிகளுக்கு மத்தியில் சிறீ லங்கன் எயார் லைன்ஸ்

கொழும்பு, டிசெ. 20

தேசிய விமான நிறுவனம் முதலீட்டாளர் ஒருவருக்கு வழங்க முன்மொழியப்பட்டிருந்தபோதிலும், இதுவரை அதற்கான செயல்பாடுகள் ஏதும் நிறைவு பெறவில்லை.

இதேவேளை, சிறீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் பல்வேறு பிரச்னைகளால் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அண்மித்த காலத்தில் அவ்வாறான 17 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

கட்டுநாயக்காவிலிருந்து பிரான்ஸின் பாரிஸில் உள்ள சார்ள்ஸ் டி கௌல்லே விமான நிலையத்திற்கு பயணித்த விமானம் தொழில்நுட்பக் கோளாறால் மீண்டும் நாட்டிற்கு திரும்ப முடியாத நிலையில் உள்ளது.

யு. எல். 563 எனும் ஏ 330 வகை விமானம் தொடர்ந்தும் அங்கேயே நிறுத்தப்பட்டுள்ளது. இந்த விமானம் இலங்கைக்கு இன்றைய தினம் திரும்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் தெரிவித்துள்ளது.

தொழில்நுட்ப கோளாறால் பிரான்ஸில் நேற்று தரையிறங்கிய விமானத்துடன், தற்போது இயக்கத்தில் இருந்து விலக்கி கொள்ளப்பட்ட இலங்கை விமானங்களின் எண்ணிக்கை 9 ஆகும். இவற்றில் 5 விமானங்கள் தேவையான கருவிகள் இல்லாமையால் இதுவரை சேவையில் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

தற்போது இரண்டு விமானங்களின் பராமரிப்பு பணிகள் இடம்பெற்று வருவதாக விமான சேவை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவற்றுக்கு ஊழியர்களின் பற்றாக்குறை பாரிய தடையாக இருப்பதாக விமானப் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டினர்.

இந்த நிலையில், தொழில்நுட்பக் கோளாறுக்குள்ளான விமானத்தின் பராமரிப்பு பணிகளையேனும் ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 2022 ஜனவரி மாதம் முதல் தற்போது வரை 138 அனுபவம் வாய்ந்த விமான தொழில்நுட்ப வல்லுநர்கள் குறித்த சேவை பிரிவிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் இராஜினாமா செய்துள்ளதுடன், சிலர் பதவி உயர்வு பெற்றும் சிலர் ஓய்வு பெற்றும் சென்றனர். விமான




சேவை சந்தையில் தற்போதைய தேவையினால், நாட்டின் தற்போதைய சூழ்நிலையை கருத்திற் கொண்டு, இராஜினாமா செய்த பெரும்பாலானோர் ஏனைய விமான நிறுவனங்களில் சேவையில் இணைந்து கொண்டுள்ளனர்.

சிறீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு 475 விமான தொழில்நுட்ப வல்லுநர்கள் தேவைப்படுகின்றபோதிலும், தற்போது 380 விமான தொழில்நுட்ப வல்லுநர்களே உள்ளனர்.

அனுபவம் வாய்ந்த வல்லுநர்களின் எண்ணிக்கை 280 ஆகும். இதனிடையே, 160 பேரில் 40 பேர் கடந்த காலங்களில் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்று சிறீ லங்கன் எயார்லைன்ஸின் உரிமம் பெற்ற விமானப் பொறியியலாளர்கள் அண்மையில் தெரிவித்தனர். (ஐ)

# மழைவீழ்ச்சி குறைவடையும்!

யாழ்ப்பாணம், டிசெ. 20

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு பெய்யும் கனமழைக்கான பிரதான காரணம், வங்காள விரிகுடாவில் தோன்றியுள்ள காற்று சுழற்சியானது மேற்கு நோக்கி, இலங்கைக்கு கீழாக நகர்ந்து அரபிக்கடலை சென்றடைகின்றமையாகும் என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த சுழற்சி காற்றானது இன்று அல்லது நாளை இலங்கையிலிருந்து முழுமையாக விடுபட்டு அரபிக் கடலுக்கு செல்வதன் காரணமாக இன்று இரவு முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் படிப்படியாக மழை வீழ்ச்சி குறைவடைவதற்கான சந்தர்ப்பம் உள்ளதென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த கனமழை காரணமாகவும் வடக்கு மாகாணத்தில் உள்ள நீர்ப்பரப்பு நீர் நிலைகள் அவற்றினுடைய உவர்நீரை வெளியேற்றுவதன் காரணமாகவும் பல்வேறு பகுதிகள் வெள்ள அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளன.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளும், கிளிநொச்சியின் கிழக்குப் பகுதியும், வவுனியா மாவட்டத்தினுடைய வடக்கு பகுதியும் , மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு, நானாட்டான், முசலி போன்ற பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலும் கிடைக்கின்ற கனமழை மற்றும் மேலதிக மேற்பரப்பு நீர் காரணமாகவும் வெள்ள அனர்த்தங்கள் ஏற்பட்டு வருகின்றன.

தொடர்ச்சியாக வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற 54 நடுத்தர மற்றும் மிகப்பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் அவற்றினுடைய உவர் நீரை வெளியேற்றுவதற்றுவதன் காரணமாகவும், தொடர்ச்சியாக 100 மில்லிமீற்றருக்கு மேற்பட்ட மழை வீழ்ச்சி பல பிரதேசங்களில் பதிவாகி இருப்பதன் காரணமாகவும் வடக்கு மாகாணத்தினுடைய பல பகுதிகளிலும் வெள்ள அனர்த்தத்திற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இந்த அர்த்தத்திற்கு முகம் கொடுக்கக்கூடிய பகுதிகளில் வசிக்கின்ற மக்கள், குறிப்பாக வடக்கு மாகாணத்தினுடைய தாழ்நிலப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள், ஆற்றங்கரை ஓரம், குளங்கள் மற்றும் வான் பாய்கின்ற பகுதிகளுக்கு அண்மித்திருக்கின்ற மக்கள் முன்னேற்பாடாக பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதன் ஊடாக, ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைப்பதற்கான நிலைமைகள் காணப்படுகின்றன.

அதேசமயம் வடக்கு மாகாணத்திற்கு தற்போது கிடைத்து வருகின்ற மழையானது நாளை பிற்பகுதியுடன் படிப்படியாக குறைவடைந்து மீண்டும் 23 ஆம் திகதியளவில் மழை வீழ்ச்சி ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

வங்காள விரிகுடாவில், குறிப்பாக இலங்கைக்கு கிழக்காக எதிர்வரும் 19, 20, 22 ஆம் திகதிகளில் மீண்டும் ஒரு காற்று சுழற்சி உருவாகுவதன் காரணமாக இலங்கையினுடைய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மீளவும் ஒரு கனமழையை எதிர்நோக்குவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

அத்துடன், எதிர்வரும் 29 ஆம் திகதியும், 2024ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதியும் மீளவும் காற்று சுழற்சிகள் தோன்றுவதற்கான வெப்பநிலை சாதகங்கள் வங்காள விரிகுடாவில் காணப்படுவதன் காரணமாக வடக்கு மாகாணம் அடுத்த ஆண்டு முன்பகுதி வரை தொடர்ச்சியாக கனமழையை எதிர்கொள்வதற்கான வாய்ப்புகளைக் கொண்டிருக்கின்றது - என்றார். (அ)

# “கெஹலிய ரம்புக்வெலவை கைதுசெய்க!”

கொழும்பு, டிசெ. 20

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவை கைதுசெய்யுமாறு இலஞ்சம், ஊழல் மற்றும் வீண்விரயத்துக்கு எதிரான புரவெசி பலய அமைப்பு பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் தடுப்பூகளை இறக்குமதி செய்ததாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக புரவெசி பலய அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

தற்போது சுற்று சூழல் அமைச்சராக பதவி வகிக்கும் கெஹலிய ரம்புக்வெல்ல, சுகாதார அமைச்சராக இருந்த காலப்பகுதியிலேயே இவ்வாறு தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை கொள்வனவு செய்துள்ளதாகவும் புரவெசி பலய அமைப்பு குறித்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ரஷ்ய எதிர்க்கட்சி தலைவர் நவால்னி சிறையிலிருந்து காணாமல் மாயம்?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னி சிறையில் இருந்து காணாமல் போனதாக அவரது ஆதரவுக்குழு தெரிவித்துள்ளது. ரஷ்ய ஜனாதிபதி புட்டினின் அரசை கடுமையாக விமர்சித்து வரும் எதிர்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னி (Alexei Navalny) கடந்த 2020ஆம் ஆண்டு விஷத் தாக்குதலில் இருந்து அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

**புட்டினின் அரசியல் எதிரி நவால்னி :**

47 வயதான அலெக்ஸி நவால்னியின் வழக்கறிஞர்கள் கடந்த திங்களன்று சிறையில் அடைக்கப்பட்ட ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவருடனான தொடர்பை இழந்துவிட்டதாகக் கூறினர். அவர் மாஸ்கோவிலிருந்து கிழக்கே 150 மைல் தொலைவில் உள்ள ஒரு தண்டனை கூடிய சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. ஆயினும் அவர் இருக்கும் இடம் முழுமையாக தெரியவில்லை.


தீவிரவாத சமூகத்தை உருவாக்குதல், தீவிரவாத நடவடிக்கைகளுக்கு நிதியளித்தல் மற்றும் பல குற்றங்களில் ஈடுபட்டதாக நவீல்னிக்கு 19 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஏற்கனவே மோசடி மற்றும் அவர் மறுக்கும் பிற குற்றச்சாட்டுகளில் அதிகபட்ச பாதுகாப்பு சிறைகளில் 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்து வந்தார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மீதான அவரது விமர்சனத்தை அடக்குவதற்கான அரசியல் சூழ்ச்சி முயற்சி என்று அவரது கைது மற்றும் சிறைவாசம் என நவால்னியின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

சில மாதங்களுக்கு முன்பாக கடுமையான உடல்நலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு நவால்னி இருப்பதாக நம்பப்படுகிறது.

நவால்னியை கடந்த ஆறு நாட்களாக காணவில்லை என்றும், நவால்னி கடைசியாக மாஸ்கோவின் கிழக்கே உள்ள IK-6 தண்டனை சிறையில் அடைக்கப்பட்டு இருந்தார்.





**அமெரிக்க வெள்ளை மாளிகை கவலை:**

நவால்னியின் காணாமல் போன செய்திகள் குறித்து ஆழ்ந்த கவலை என்று அமெரிக்க வெள்ளை மாளிகை கூறியுள்ளது. அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அவர் முதலில் சிறையில் அடைக்கப்பட்டிருக்கக் கூடாது. மேலும் எவ்வளவு அதிகமாகக் கண்டுபிடிக்க முடியும் என்பதைப் பார்க்க மாஸ்கோவில் உள்ள எங்கள் தூதரகத்துடன் இணைந்து பணியாற்றப் போகிறோம், என்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி ஏர் ஃபோர்ஸ் ஒன்னில் செய்தியாளர்களிடம் கூறினார்.

கடந்த திங்களன்று வீடியோ இணைப்பு மூலம் நீதிமன்றத்தில் நவால்னி ஆஜராக வேண்டும். சிறைச்சாலையில் மின்சார பிரச்சினை காரணமாக நவால்னி விசாரணைக்கு ஆஜராக முடியவில்லை என சிறை அதிகாரிகள் அவரது குழுவிடம் தெரிவித்தனர்.

**மார்ச் 2024 இல் ரஷ்ய தேர்தல்:**

மார்ச் 2024 இல் ரஷ்யாவின் தேர்தலில் மீண்டும் ஜனாதிபதியாக போட்டியிடப் போவதாக புட்டின் அறிவித்த சில நாட்களுக்குப் பிறகு நவால்னியின் காணாமல் போன விவகாரம் நடந்துள்ளது. மீண்டும் ஜனாதிபதியாக போட்டியிடும புட்டின் குறைந்தபட்சம் 2036 வரை அவர் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்த ஆட்சியின் போது புட்டினின் சட்டப்பூர்வத்தன்மைக்கு மிகவும் கடுமையான அச்சுறுத்தல்களில் ஒன்றை நவால்னி முன்வைத்தார். அவர் அரசாங்க எதிர்ப்பு தெரு ஆர்ப்பாட்டங்களை பல ஏற்பாடு செய்தார். கிரெம்ளின் மற்றும் ரஷ்ய வணிகத்தில் கூறப்படும் ஊழலை அம்பலப்படுத்த தனது வலைப்பதிவு மற்றும் சமூக ஊடகங்களை நவால்னி பயன்படுத்தினார்.

2020இல் சைபீரியாவின் ஓம்ஸ்கில் இருந்து மாஸ்கோவுக்குச் செல்லும் விமான பயணத்தின்போது நவால்னி மயங்கி விழுந்தார். இரண்டு நாட்களுக்குப் பிறகு, கோமா நிலையில் இருந்த நவால்னி அவசர சிகிச்சைக்காக ஜேர்மனி கொண்டு செல்லப்பட்டார். நவால்னிக்கு ‘நோவிசோக்’ என்கிற, சோவியத் பனிப்போர் காலத்தில் உருவாக்கிய விஷம் கொடுக்கப்பட்டதாக ஐரோப்பிய மருத்துவ நிபுணர்கள் கூறினர்.

**நவால்னி கொலை முயற்சி:**

நவால்னியை சைபீரிய நகரமான ஓம்ஸ்கில் இருந்து விமானம் ஏற்றி, பெர்லினில் உள்ள மருத்துவமனைக்கு கோமா நிலையில் கொண்டு வர வேண்டியிருந்தது.

கூட்டு விசாரணயில் நவால்னியின் விஷத்தில் ரஷ்ய பாதுகாப்பு சேவையை தொடர்புபடுத்தியது. சுமார் ஆறு முதல் 10 முகவர்கள் கொண்ட FSB குழு மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நவால்னியை பின்தொடர்ந்ததாக விசாரணையில் கண்டறியப்பட்டது.

நவால்னியை பின் தொடர்ந்த உளவாளிகளில் ஒருவரான கான்ஸ்டான்டின் குத்ரியாவ்ட்சேவ் என்பவர் எப்படி விஷம் குடித்தார் என்பதை வெளிப்படுத்தினார். ரஷ்யாவின் தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் மூத்த அதிகாரியாக அவர் இருந்தார். நச்சு நடவடிக்கையை பகுப்பாய்வு செய்யும் பணியில் ஈடுபட்டதுடன், அவர் நவால்னியின் உள்ளாடைகளில் நரம்பு விச முகவர்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டனர் என்பது பற்றிய விரிவான அறிக்கையை வழங்கினார்.

நவால்னியின் கொலை முயற்சியில் பங்கேற்றதை ரஷ்யா மறுக்கிறது. ரஷ்ய பாதுகாப்பு சேவை நவால்னியைக் கொல்ல விரும்பியிருந்தால், அவர்கள் வேலையை எப்போதோ முடித்திருப்பார்கள் என்று புட்டின் டிசம்பர் 2020 இல் கூறினார்.

**சிறையில் அலெக்ஸி நவால்னி :**

சிறையில் அடைக்கப்பட்ட கிரெம்ளின் விமர்சகர் அலெக்ஸி நவால்னி, மாஸ்கோவில் உள்ள நீதிமன்றத்தில், தீவிரவாதத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் கீழ் அதிகபட்ச பாதுகாப்புச் சிறையில் 19 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நீதிமன்றத் தீர்ப்பை வழங்கியது.

நவால்னி கடந்த தசாப்தத்தில் ரஷ்யாவின் உரத்த எதிர்ப்புக் குரலாக இருந்தார். மேலும் 2021 இல் அவர் சிறையில் அடைக்கப்படுவதற்கு முன்பு மிகப்பெரிய அரசாங்க எதிர்ப்பு பேரணிகளை ஊக்குவித்தார்.

ஆயினும் ஜனவரி 2021 இல் ரஷ்யாவுக்குத் திரும்பிய நவால்னி உடனடியாக சிறையில் அடைக்கப்பட்டார். 2013 இல் அவருக்கு எதிராக தொடரப்பட்ட மோசடி வழக்கு தொடர்பான அவரது தகுதிகாண் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில், அவர் அரசியல் நோக்கத்துடன் நிராகரிக்கப்பட்டார்.



அவர் உக்ரைன் மீதான ரஷ்யாவின் போருக்கு எதிராக சிறையில் இருந்து பிரச்சாரம் செய்ததுடன், போருக்கு பொது எதிர்ப்பை திரட்ட முயன்றார்.

பல அரசியல் கைதிகளைப் போலவே நானும் ஆயுள் தண்டனையில் அமர்ந்திருக்கிறேன் என்பதை நான் நன்கு புரிந்துகொள்கிறேன். எனது வாழ்நாள் அல்லது இந்த ஆட்சியின் ஆயுட்காலம் மூலம் என் வாழ்க்கை அளவிடப்படுகிறது, என்று சிறையில் அடைக்கப்பட்ட கிரெம்ளின் விமர்சகர் அலெக்ஸி நவால்னி தெரிவித்துள்ளார்.

# நாட்டின் மீட்சியில் சகலரையும் உள்ளடக்கவேண்டியது அவசியம்






**கலாநிதி ஜெகான் பெரேரா**

இலங்கை எதிர்நோக்குகின்ற மிகவும் பாரதூரமான இரு பிரச்சினைகளை கண்ணுக்கு புலப்ப டாததாக்கியதும் பொருளாதார படிநிலையில் உச்சத் தில் இருப்போருக்கும் சர்வதேச சமூகத்துக்கும் அந்த பிரச்சினைகளை பொருத்தமற்றதாக்கியதும் அரசாங்கத் தின் மிகப்பெரிய வெற்றியாகும். பொருளாதாரம் மீட்சி பெறத் தொடங்கிவிட்டது என்று அரசாங்கத்தினால் புள்ளிவிபரங்களைக் காண்பிக்கக்கூடியதாக இருக்கிறது. எதிர்காலத்திலும் இந்த வளர்ச்சி தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


இறுதிக் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி (1.6 சதவீதம்) நேர்மறையானதாக இருக்கிறது. ஆனால், இதே காலப்பகுதியில் வறுமை மட்டங்களைப் பற்றிய கதையைச் சொல்வதற்கும் இன்னொரு தொகுதி புள்ளிவிபரங்களும் இருக்கின்றன. வறுமை மட்டங்கள் இருமடங்காகி 25 சதவீதத்தை எட்டியிருக்கிறது. இது நாட்டு சனத்தொகையின் கால் பகுதியாகும்.

வளர்ச்சியின் அறிகுறிகளை கிறிஸ்மஸ் அலங்காரங்களில் காணக்கூடியதாக இருக்கிறது. அந்த அலங்காரங்கள் மீதான இறக்குமதித் தடை நீக்கப்பட்ட பிறகு இறக்குமதிகளில் அவற்றின் மீதான செலவினமே மிகவும் உயர்ந்ததாக இருப்பதாக சுங்கப் பணிப்பாளர் கூறியிருக்கிறார்.

மற்றைய முக்கியமான பிரச்சினையான மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்த இனநெருக்கடியாகும். அது பின்னரங்கத்துக்கு போயிருந்தாலும் அடியில் குமுறிக் கொண்டிருக்கிறது. அந்த நெருக்கடியை அவசர கவனத்துக்குரிய ஒன்றாக அரசாங்கமோ அல்லது பெரும்பான்மையின மக்களோ பார்ப்பதாக இல்லை.

இலங்கையின் 75 வது சுதந்திர தினமான 2023 பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னதாக இனநெருக்கடிக்கு தீர்வைக் காணப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தபோது அது அவசர கவனத்துக்குரிய பிரச்சினையாகத் தோன்றியது. இத்தகைய உறுதிமொழியை வழங்கிய முதல் தலைவர் விக்கிரமசிங்க அல்ல. போர் முடிவுக்கு வந்த பிறகு துரிதமாக அரசியல் தீர்வொன்றைக் காணுமாறு சர்வதேச சமூகம் நெருக்குதலைக் கொடுத்தவேளையிலும் இவ்வாறாக உறுதிமொழிகள் வழங்கப்பட்டன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வாபஸ்பெறுவது போன்ற தடைகளை இலங்கை மீது விதிக்கப்போவதாக சர்வதேச சமூகம் அச்சுறுத்தியது. முதலில் அந்த வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் மூன்று வருடங்கள் நீக்கியிருந்தது. அதனால் பொருளாதாரத்துக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது.




பொறுப்புக்கூறல் தொடர்பான பிரச்சினைகளையும் இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு நீண்டகாலமாக தவறியது தொடர்பிலான பிரச்னைகளையும் சர்வதேச சமூகத்துடன் கையாளுவதற்கு அரசாங்கம் திட்டமொன்றைக் கொண்டிருக்கின்றது போன்று தெரிகிறது.

ஒரு புறத்தில் அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத்தொடர் நடைபெறவிருக்கும் எதிர்வரும் மார்ச் மாதமளவில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது. ஏற்கெனவே அரசாங்கம் அந்த நோக்கத்துக்காக அலுவலகம் ஒன்றை அமைத்திருக்கிறது. அந்த அலுவலகம் ஆணைக்குழுவை அமைப்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது.

மறுபுறத்தில் அரசியல் தீர்வொன்றின் ஊடாக இனநெருக்கடியைத் தீர்த்துவைப்பதில் தனக்கு அக்கறை இருப்பதாகவும் அரசாங்கம் அறிகுறியைக் காட்டுகிறது. புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் ஒரு பிரிவினரும் சில பௌத்த மதகுருமாரும் செய்திருக்கும் இமாலயப் பிரகடனம் அத்தகைய தீர்வொன்றுக்கான பரந்த ஆதாரக் கட்டமைப்பாக அமையக்கூடும்.

கடந்த காலத்தில் புலம்பெயர் தமிழர்களும் பௌத்த மதகுருமாரும் இனநெருக்கடிக்கு தீய்வுகாண்பதற்கான முயற்சிகளைக் குழப்புகின்ற சக்திகளாகவே நோக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். ஆனால், இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான எந்தவொரு முயற்சியையும் அதன் தகுதியின் அடிப்படையில் தீர்வொன்றுக்கான சாத்தியப்பாடாக நோக்கவேண்டிய தேவை இருக்கிறது.

**சர்வதேச ஆதரவு**

போரின் முடிவுக்கு பின்னரான நிறைபேறான நல்லிணக்கம் தொடர்பில் கருத்தொருமிப்பைக் காணும் நோக்கில் அரசாங்கத்தையும் ஏனைய கட்சிகளையும் புதிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவைப்பதற்கு தற்போது உலக தமிழர் பேரவை மேற்கொண்டிருக்கும் முன்முயற்சிக்கு அமெரிக்கா ஆதரவு வழங்குவதாக ஊடக செய்திகள் கூறுகின்றன.

ஐக்கிய இராச்சியத்தில் இருந்து இயங்கும் அதன் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தலைமையிலான உலக தமிழர் பேவையின் தூதுக்குழுவையும் ‘சிறந்த இலங்கைக்கான மகாசங்கத்தின்” பிரதிநிதிகளையும் டிசம்பர் 12 கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் சந்தித்த தூதுவர் ஜூலி ஷங் சமூகங்களுக்கு இடையிலான புரிந்துணர்வை விரிவுபடுத்துவதற்கும் நிலைபேறான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் அவர்கள் முன்னெடுத்திருக்கும் முயற்சியை அமெரிக்கா ஆதரிப்பதாகக் கூறியிருக்கிறார்.

இந்த முயற்சியும் கூட தமிழ் மக்களும் புலம்பெயர் தமிழர்களும் செய்கின்ற சூழ்ச்சியாக நோக்கப்படுவது பிரச்சினையாக இருக்கிறது.

இலங்கை மீதான தீர்மானத்தை தொடருவதா இல்லையா என்பதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை 2024 செப்டெம்பரில் தீர்மானிக்கும். ஐக்கிய நாடுகள் முறைமையினால் இதுவரையில் விதிக்கப்பட்ட தடைகளை வெற்றிகொள்ளக்கூடிய வலுவான ஒரு நிலையில் இலங்கை இருக்கும்.

இலங்கையின் உரிமை மீறில்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் கவனம் செலுத்துகின்ற விடயத்தில் அது இரட்டைத் தன்மையாக நடந்துகொள்கிறது என்ற தனது குற்றச்சாட்டை நியாயப்படுத்த இலங்கை தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ரஷ்ய - உக்ரெய்ன் போரையும் இஸ்ரேல் -- பாலஸ்தீனப் போரையும் அங்கு இடம்பெறும் படுமோசமான மனித உரிமை மீறல்களையும் சுட்டிக்காட்டக்கூடும்.

போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இஸ்ரேலுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை வலியுறுத்துவதில் தென்னாபிரிக்கா தன்னந்தனியனாகவே செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. குடிமக்களைப் பாதுகாப்பதற்கான உலக ஒழுங்கை மீளக் கட்டியெழுப்பவேண்டியிருக்கிறது.

(16ம் பக்கம் பார்க்க)

# நாட்டின் மீட்சியில் சகலரையும்...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள மக்கள் நாட்டின் ஏனைய பகுதி மக்கள் அனுபவிக்கும் பொருளாதார இடர்பாடுகளை அனுபவிப்பதற்கு மேலதிகமாக பாகுபாடாக நடத்தப்படுவதன் விளைவான இரட்டைச் சுமையின் கொடுமையையும் தாங்கிக்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

1987 ஆம் ஆண்டில் தமிழும் அரசகரும மொழியாக்கப்பட்ட போதிலும் தமிழர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட வடக்கும் கிழக்கும் அரசாங்கத்திடமிருந்து தொடர்ந்தும் சிங்கள மொழியிலேயே கடிதத்தைப் பெறுகின்றன. அவர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு சென்றால் தங்களுக்கு விளங்காத சிங்கள மொழியில் சிங்கள பொலிசாரினால் வாக்குமூலங்கள் பதியப்படுகின்ற பிரச்சினையை எதிர்நோக்குகிறார்கள்.

வடக்கிலும் கிழக்கிலும் பணிபுரியும் பெரும் எண்ணிக்கையான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் தமிழ் மொழியுடன் பரிச்சயம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். அந்த எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே போகிறது. இந்த நிலைலரம் பதற்றத்தை தணிக்கவோ தமிழ்பேசும் மக்களை சமத்துவமானவர்களாக நடத்துவதில் அரசாங்கத்துக்கு இருக்கும் கடப்பாடு மீது அந்த மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தவோ உதவாது.

இது இலங்கையில் சிவில் சேவை அதிகாரியாக பணியாற்றிய வெள்ளைக்காரர் லெனாரட் வூவ்வ் எழுதிய 'காட்டுக்குள் ஒரு கிராமம்" (Village in the Jungle) நாவலில் வருகின்ற சிங்களக் கிராமத்தவனின் ஒரு நூற்றாண்டுக்கு முந்திய அவலத்தை நினைவுபடுத்துகிறது. அந்த கிராமத்தவன் தனக்கு விளங்காத ஆங்கிலமொழியில் வழங்கப்பட்ட நீதியையே அனுபவிக்கவேண்டியிருந்தது. இவ்வாறாக பெருவாரியான உதாரணங்களைக் கூறமுடியும்.

### தேவைப்படும் மாற்றம்

நிலைவரம் வழமைக்கு திரும்பியிருப்பது போன்ற தோற்றப்பாடு இருக்கின்ற போதிலும், மக்களைப் பொறுத்தவரை களநிலைவரம் கடுமையானதாகவே இருக்கிறது. கடந்த பல மாதங்களாக விலைவாசி மூன்று மடங்காக அதிகரித்திருந்த போதிலும், பெரும்பாலான மக்களின் வருமானம் எந்த வகையிலும் அதிகரிக்கவில்லை. பலர் தங்களது தொழில்களையும் கூட காப்பாற்ற முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

இலங்கையர்களில் ஒரு சதவீதமானவர்கள் நாட்டின் மொத்த தனிப்பட்ட சொத்துக்களில் 31 சதவீதத்துக்கு சொந்தக்காரர்களாக இருக்கின்ற அதேவேளை அடிமட்டத்தில் உள்ள 50 சதவீதமான மக்கள் வெறுமனே 4 சதவீதத்துக்கும் குறைவான சொத்துக்களுக்கு செந்தக்காரர்களாக இருக்கிறார்கள் என்று ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் புதிய அறிக்கையொன்று கூறுகிறது.

33.4 சதவீதமான மக்கள் கடன்சுமையினாலும் வறுமையினாலும் அவலப்பட்டுக்கொண்டிருப்பதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது. அன்றாட நுகர்வுக்காக கடன் படவேண்டியிருக்கும குடும்பங்களில் 31.1 சதவீதமானவை தங்களது உடைமைகளை அடகு வைக்கின்றன. 24 சதவீதமான குடும்பங்கள் வட்டிக்கு பணம் கொடுப்பவர்களிடம் கடன் பெறுகின்றன. 23.5 சதவீதமான குடும்பங்கள் வங்கிகளில் கடன்களைப் பெறுகின்றன.

இந்த இடர்பாடுகள் தங்களது கல்வி வசதிகளைக் குறைத்துக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகும் சிறுவர்கள் மற்றும் இரவில் சாப்பிடாமல் நித்திரைக்கு செல்லும் சிறுவர்கள் மனதில் தங்களது நலன்களைக் கவனிக்காத அரசாங்கத்துக்கு எதிரான கிளர்ச்சி உணர்வையே தூண்டிவிடும்.

"அறகலய" போராட்ட இயக்கத்தினால் பதவியில் இருந்து விரட்டப்பட்ட அதே அமைச்சர்களை வைத்துக் கொண்டே ஆட்சியை நடத்துவதில் இதுவரை அரசாங்கம் வெற்றிகண்டிருக்கிறது. ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் ஆட்சிமுறையில் சுறுசுறுப்பைக் காட்டுகின்ற நாடுகளில் முன்னணியில் நிற்கும் மூன்று நாடுகளில் ஒன்றாக இலங்கையை ஐக்கிய நாடுகள் 2024 ஆம் ஆண்டுக்கான அதன் மனித அபிவிருத்தி அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

புதிய தகவல்களுக்கும் எதிர்பாராத நிகழ்வுகளுக்கும் பதிலளிப்பதில் எதிர்வினையை துரிதமாகவும் செயல்திறனுடனும் காட்டும் நாடுகளில் இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸூடன் சேர்த்து இலங்கையை அந்த அறிக்கை குறிப்பிட்டிருக்கிறது.

பல்வேறு தரப்பினர் ஒன்றிணைந்து மாற்றத்துக்காக ஆரவைத் திரட்டுவதற்கு வசதியான சூழலை இலங்கை உருவாக்கியிருக்கிறது என்றும் கூட்டு நடவடிக்கை ஜனநாயக விழுமியங்கள் நிலைநிறுத்தவும் அமைதியான முறையில் அரசாங்க மாற்றத்துக்கும் உதவியிருக்கிறது என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எந்தவொரு அரசாங்க மாற்றமும் இதுவரை எட்டப்பட்ட பொருளாதாரப் பயன்கள் மறுதலையாக்கப்படுவதற்கு வழிவகுக்கும் என்ற ஒரு தோற்றப்பாட்டைக் காண்பிப்பதில் அரசாங்கம் கெட்டித்தனமான முறையில் நடந்துகொள்கிறது. இரு பிரதான எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைய மீள் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்போவதாக கூறியிருக்கிறார்கள். இது உடன்படிக்கையில் இருந்து விலகும் ஒரு நடவடிக்கையாக அமையவேண்டும் என்றில்லை.

மக்கள் மீது சுமைகளை ஏற்றாத முறையில் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கை ஒன்று எட்டப்படும் என்று எதிரக்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கூறியிருக்கிறார்.

குறிப்பாக, பொருளாதார வர்க்கங்களை பிளவுபடுத்தி மாற்றம் தொடர்பிலும் தங்களது வசதியான வாழ்வைப் பேணுவதில் உள்ள விருப்பம் தொடர்பிலும் உயர் மற்றும் மத்தியதர வர்க்கங்களுக்கு இருந்த பயத்தை அகற்றி அவர்களின் ஆதரவைப் பெறுவதில் அரசாங்கம் மிகவும் சாதுரியமாக செயற்பட்டிருக்கிறது.

முன்னெடுக்கப்படுகின்ற கடுமையான பொருளாதார நடவடிக்கைகளுக்கு எதிராக இடம்பெறும் வீதிப் போராட்டங்களைத் தடுப்பதற்கு பாதுகாப்பு படைகளைப் பயன்படுத்துவதில் கைதேர்ந்ததாக அரசாங்கம் விளங்குகிறது.

ஆனால் நாட்டு மக்கள் மாற்றம் ஒன்றை வேண்டி நிற்கிறார்கள் என்பதே மண்ணில் நிலவும் உண்மையாகும். பிரெஞ்சு புரட்சிக் காலத்தில் பெரும் அபகீர்த்திக்குள்ளான மேறி அன்ரொய்னெற் கூறியதைப் போன்ற வார்த்தைகளை அல்ல மக்கள் கேக் துண்டு ஒன்றையும் விரும்புகிறார்கள்.

